பக்கங்கள் : பன்னிரண்டு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 பங்குனி 27 புதன்கிழமை (09.04.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 135

படிப்பகம் மாநகர சபை, யாழ்ப்பாணம்

# இரண்டாக உடைந்தது ஜே.வி.பி.!

# வீரவன்ஸ பக்கம் 11 எம்.பிக்கள்!!

## கட்சிக்குள் தனிக்குழுவாக இயங்கப் போவதாக அறிவிப்பு

கொழும்பு, ஏப்ரல் 09

**ஜே.வி.பியின் நாடாளுமன்றக் குழுத் தலைவரும் பிரசாரச் செயலாளருமான விமல் வீரவன்ஸவைக் கட்சியிலிருந்து இடைநிறுத்த ஜே.வி.பி. எடுத்த முடிவை அடுத்து அக்கட்சி இரண்டாக உடைந்தது.**

**விமல் வீரவன்ஸவுடன் இணைந்து மேலும் பதினொரு எம்.பிக்கள் தனித்து ஒரு குழுவாகச் செயற்படத் தீர்மானித்திருக்கின்றனர்.**

கட்சியிலிருந்து தம்மை இடைநிறுத்த எடுத்த முடிவு குறித்துப் பகிரங்கமாகக் கருத்து வெளியிடும் வகையில் விமல் வீரவன்ஸ நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றினார்.

அதையடுத்து, கட்சி இரு குழுவாகப் பிரிவது அம்பலத்துக்கு வந்தது.

தாம் கட்சிக்குள் தனிக் குழுவாக இருந்து நியாயத்துக்காகப் போராடப் போகின்றார் என விமல் வீரவன்ஸ அறிவித்தார்.

அவரது நாடாளுமன்றப் பேச்சை அடுத்து, ஜே.வி.பியின் பின்வரிசை எம்.பிக்கள் சிலர் எழுந்து ஓடி வந்து அவருக்குக் கைகுலுக்கிப் பாராட்டுத் தெரிவித்தபோதே அவருக்குப் பின்னால் எம்.பிக்கள் குழு ஒன்று தனி அணியாகிவிட்டமை பகிரங்கமாயிற்று.

இதனை உறுதிப்படுத்துமாற்போல அவரது ஆதரவு எம்.பிக்கள் நேற்று மாலை கொழும்பு நிப்போன் ஹோட்டலில் தனியான பத்திரிகையாளர் மாநாடு ஒன்றை நடத்தி, கட்சி பிளவுபட்டிருப்பதை வெளிப்படுத்தினர்.

(11 ஆம் பக்கம் பார்க்க)

## சர்வதேச சக்திகளின் சூழ்ச்சியாலேயே ஜே.வி.பியிலிருந்து தமக்குக் கல்தாவாம்!

### நாடாளுமன்றில் விமல் வீரவன்ஸ வேதனை

கொழும்பு, ஏப்ரல் 9

''இந்த நாட்டுக்காக எனது உயிரையும் துச்சமென மதித்து, முழு இளமைக் காலத்தையும் பயன்படுத்தி ஜே.வி.பியின் வளர்ச்சிக்காகப் பாடுபட்ட என்னை, கட்சியில் இருந்து தூக்கிவீசத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இது குறித்து நான் மனதால் அழுகின்றேன்.''

- இவ்வாறு விமல் வீரன்ஸ நேற்று நாடாளுமன்றில் கூறினார். அவரை ஜே.வி.பியின் மத்திய குழு உறுப்பினர் பதவியில் இருந்து விலக்க கட்சி முடிவெடுத்துள்ளமை தொடர்பாக அவர் நேற்று விசேட உரையொன்றை நாடாளுமன்றில் ஆற்றிய போதே இவ்வாறு கூறினார்.

அப்போது அவர் மேலும் கூறியவை வருமாறு:-

மே மாதம் 10ஆம் திகதி என்னை ஜே.வி.பியில் இருந்து விலக்க ஜே.வி.பி. மத்திய குழு முடிவெடுத்துள்ளதாக நான் அறிந்தேன்.

இந்த முடிவு குறித்து நான் மிகவும் கவலைப்படுகிறேன். உள்ளத்தால் அழுகிறேன். 20 வருடங்களாக நான் இந்தக் கட்சிக்காக உழைத்துள்ளேன்.

(11 ஆம் பக்கம் பார்க்க)

## குடாநாட்டில் 'வைரஸ்' காய்ச்சல் தீவிரமாகப் பரவுகிறது

யாழ்ப்பாணம், ஏப்ரல் 09

குடாநாட்டில் ஒருவகையான புதிய வைரஸ்' காய்ச்சல் தீவிரமாகப் பரவிவருவதாக வைத்திய வட்டாரங்கள் எச்சரித்துள்ளன.

(12 ஆம் பக்கம் பார்க்க)

*5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவ மணிகளுக்கு உதயன் வருடந்தோறும் வழங்கும் பயிற்சிப் பரீட்சை வினாத்தாள் உள்ளே ஆறாம் பக்கத்தில்*

## திங்களன்று புதுவருட விசேடவிடுமுறை

தமிழ் - சிங்கள புத்தாண்டை முன்னிட்டு எதிர்வரும் திங்கட்கிழமை 14ஆம் திகதி விசேட அரச விடுமுறையாக பிரகடனப் படுத்தப்பட்டிருக்கிறது.

இம்முறை தமிழ், சிங்கள புத்தாண்டு 13ஆம் திகதி மாலை வேளையில் பிறப்பதால், அரசாங்கம் 14ஆம் திகதி திங்கட்கிழமையை விசேட அரசாங்க விடுமுறையாகப் பிரகடனப்படுத்தி உள்ளது.

இதற்கான பணிப்புரையைஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அமைச்சர் கரிஜெய சூரியா வுக்கு வழங்கியுள்ளார். (அ-2)

## நாடாளுமன்றில் ஐ.தே.கவினர் களேபரம்! அரச - எதிரணி எம்.பிக்கள் கைகலப்பு!!

கொழும்பு, ஏப்ரல் 09

தம்மிக்க கித்துல்கொட - பதில் நாடாளுமன்ற செயலாளர் நாயகமாக நியமிக்கப் பட்டமையைக் கண்டித்து - அந்நியமனம் அரசமைப்புக்கு முரணானது என்று தெரிவித்து, ஐ.தே.கட்சியினர் நேற்று நாடாளுமன்றில் மூன்று தடவைகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் இரண்டு தடவைகள் சபை ஒத்திப்போடப்பட்டது.

அப்போது ஐ.தே. கட்சியினருக்கும் அரச தரப்பினருக்குமிடையில் கைகலப்பும் ஏற்பட்டது.

ஐ.தே.கட்சியின் எம்.பியான தயாசிறி ஜயசேகரவின் சட்டைக் கொலரைப் பற்றிப் பிடித்த அமைச்சர் ஜெகத் புஷ்பகுமார அவரைத் தாக்க முற்பட்டார்.

தயாசிறிக்கு ஆதரவாக, ஐ.தே.கட்சியின் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ; அமைச்சர் ஜெகத் புஷ்பகுமாரைத் தள்ளிவிட்டுத் தாக்க முற்பட்டார்.

அப்போது பிரதி அமைச்சர் மஹிந்தானந்த அழுத்கமவும் தயாசிறியைத் தள்ளிவிட்டுத் தாக்க முற்பட்டார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## தற்கொலைத் தாக்குதல் நடத்தியவர் முஸ்லிம் போலவே அங்கு வந்தாராம்!

### வீடியோவில் எல்லாம் பதிவாகியுள்ளதாகத் தகவல்

கொழும்பு, ஏப். 09

அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளேயைக் கொலைசெய்யவந்த தற்கொலைக் குண்டுதாரி முஸ்லிம் நபர் ஒருவர் போலவே அந்த இடத்துக்கு வருகை தந்துள்ளார் என விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளதாகக் கூறப்படுகின்றது.

அந்த நபரிடமிருந்த தேசிய அடையாள அட்டையும் பொலிஸாரினால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. வெள்ளைத்தம்பி மொஹம்மது அமீன் என்ற பெயர் அந்த அடையாள அட்டையில் குறிப்பிடப்பட்டுள்ளது. பிரந்துருன்சேனை, வாழைச்சேனை என்ற முகவரியும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளதாம்.

அடையாள அட்டையில் காணப்பட்ட அனைத்து விவரங்களும் பொய்யானவை எனத் தற்போது கண்டறியப்பட்டுள்ளது.

(11 ஆம் பக்கம் பார்க்க)

## கப்பல் பயண சேவை நாளையே இடம்பெறும்

யாழ்ப்பாணம், ஏப்.09

காங்கேசன்துறைக்கும் திருகோணமலைக்கும் இடையிலான பயணிகள் கப்பல் சேவை இன்று புதன்கிழமை இடம் பெற மாட்டாது. நாளை வியாழக்கிழமையே நடைபெறும்.

அரச அதிபர் கே.கணேஷ் இத்தகவலை வெளியிட்டுள்ளார்.

இன்று பயணம் மேற் கொள்வதற்கு யாழ். செயலகத்தில் பயண அனுமதிப்பத்திரம் பெற்றவர்களை பயண ஏற்பாடுகளுடன் நாளை யாழ்.ரயில் நிலையத்துக்கு சமுகமளிக்குமாறு அவர் கேட்டுள்ளார். (அ-1)

## மதவாச்சி, ஓமந்தையில் மக்கள் போக்குவரத்து குறைந்துவிட்டது

### அரசின் மேலதிக பாதுகாப்பு ஏற்படுகளால் என்கிறது ஐ.சி.ஆர்.சி

யாழ்ப்பாணம்,ஏப் 09

மதவாச்சி சோதனை நிலையத்திலும் ஓமந்தை நுழைவாயிலிலும் அரசு அறிமுகப் படுத்தியுள்ள மேலதிக பாதுகாப்பு ஏற்பாடுகள் காரணமாக பொதுமக்களின் போக்குவரத்து குறைந்துவிட்டது.

இத்தகவல் செஞ்சிலுவை சர்வதேசக் குழுவின் பிந்திய நிலைவர அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மார்ச் 28 ஆம் திகதி செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு வெளியிட்டுள்ள அந்த பிந்திய அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ள முக்கிய தகவல்கள் வருமாறு:

* ஓமந்தை நுழைவாயிலில் நீண்ட காலம் காத்திருக்கும் லொறிகளை சோதனை

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஐரோப்பிய ஒன்றியத்தின் ஏற்றுமதிச்சலுகை ரத்தாகும் ஆபத்து என்கிறது மத்திய வங்கி

### அந்நிலையை எதிர்கொள்ளத் தயாராகும்படியும் அழைப்பு

கொழும்பு, ஏப். 09

இலங்கையின் பொருளாதார வளர்ச்சி 2007 இல் 6.8 வீதமாகக் காணப்பட்டதாக செவ்வாய்க்கிழமை தனது வருடாந்த அறிக்கையில் தெரிவித்துள்ள மத்தியவங்கி, ஐரோப்பிய ஒன்றியத்தின் ஏற்றுமதிக்கான 'ஐ.எஸ்.பி.' என்ற விசேட சலுகை அற்ற சூழ்நிலையில்செயற்படுவதற்கு கைத்தொழில்துறை தயாராக வேண்டுமென்றும் வேண்டுகோள் விடுத்துள்ளது.

பொருளாதாரத்துடன் தொடர்பற்ற வேறு காரணங்களுக்காக இச்சலுகை விலக்கப் படலாம் என்பதைக் கோடிட்டுக் காட்டியுள்ள மத்திய வங்கியின் அறிக்கையில் இது குறித்து தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

(11 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த நாளிதழ்




## 31ஆம் நாள் நினைவஞ்சலி



மூதறிஞர், கலாநிதி, பண்டிதர்

### கணபதிப்பிள்ளை சச்சிதானந்தன்

தமிழ் அறிஞராக, கல்விமானாக, வானியல் ஆய்வாளராக பன்முகப் புலமையாளராக தமிழ்மொழிக்கும் சைவத்திற்கும் பெருமையையும், புகழையும் எமக்களித்த சச்சி ஐயாவே இந்நாளில் தங்களை நினைவு கூர்ந்து தங்களின் ஆத்மா சாந்தியடையப் பரம்பொருளை இறைஞ்சி நிற்கின்றோம்.

புலோலி மெதடிஸ்த மிசன் தமிழ் கலவன் பாடசாலை. (சி/552230) அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.

## மரண அறிவித்தல்கள்

### விக்ளிப் ஜெயராசா அரசரட்ணம்

(ஓய்வுபெற்ற உத்தியோகத்தர், புகையிரதத் திணைக்களம்)



சாவகச்சேரியை வசிப்பிடமாகக் கொண்ட விக்ளிப் ஜெயராசா அரசரட்ணம் அவர்கள் 08.04.2008 செவ்வாய்க்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் அற்புதம் (ஓய்வுபெற்ற ஆசிரியை, மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம்) அவர்களின் அன்புக் கணவரும் A.J.அரசரட்ணம் (இலங்கை வங்கி யாழ். 2ஆம் கிளையின் முன்னாள் உத்தியோகத்தரும் தற்போது இலங்கை வங்கிக்கிளை, தெஹிவளை), வண C.J. அரசரட்ணம் (மெதடிஸ்த் திருச்சபை - கனடா), O.J.அரசரட்ணம் (சுவிஸ்), ஆகியோரின் அன்புத் தந்தையும் டல்சி(முன்னாள் ஆசிரியர், யாழ்.இந்துக் கல்லூரி தற்போது கொழும்பு இராமநாதன் கல்லூரி) இரட்ணா, ஜோய் ஆகியோரின் அன்பு மாமனாரும் சலோமி, சாலினி, சாலிகா, ஜெனி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரது நல்லடக்க ஆராதனை இன்று (09.04.2008) புதன் கிழமை பிற்பகல் 2 மணியளவில் பெரிய அரசடி, கண்டிவீதி, சாவகச்சேரி இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சாவகச்சேரி தென்னிந்திய திருச்சபைக் கல்லறைத் தோட்டத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பெரிய அரசடி,*
*கண்டிவீதி,*
*சாவகச்சேரி.* (72944)

தகவல்:
திருமதி அற்புதம் அரசரட்ணம்,
மகன் A.J.அரசரட்ணம் *(இலங்கை வங்கி).*

### *சின்னத்தம்பி சுப்பிரமணியம்* *(புலோலி)*

புலோலி தெற்கு, பிலாவடியைச் சேர்ந்த சின்னத்தம்பி சுப்பிரமணியம் (07.04.2008)திங்கட்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் அம்பிகைநாச்சி(தவமணி) யின் அன்புக் கணவரும், செல்வநாயகம்(கனடா), அமரர் சிவசண்முகம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் சிவானந்தராசா பங்கஜவதனி(கனடா), நாகேந்திரம் வத்சலா(கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சௌந்தரனால் (கனடா), ராகீஸ்(கனடா), இமலதாஸ்(கனடா), சகீனா(கனடா) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.04.2008) வியாழன் மு.ப. 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக புலோலி ஆனைவிழுந்தான் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள் ளவும்.

*புலோலி தெற்கு,*
*புலோலி.* (சி/552241)

தகவல்:
க.அம்பிகை [illegible]
(மனைவி)

## நல்லூர் பிரதேச செயலக இலக்கியப் போட்டி முடிவுகள்

நல்லூர் பிரதேச செயலகப் பிரிவில் கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் நடத்தப் பட்ட தேசிய இலக்கியப் போட்டிகளின் முடிவுகள் வெளி யாகிஉள்ளன.

இந்தப் போட்டிகளில் வெற்றிபெற்றோர் விவரம் வருமாறு:

சிறுகதை ஆக்கம்

* சிரேஷ்ட பிரிவு- ரவீந்திரன் மதுரன் (கனகரத்தினம் மத்திய ம.வி.), சிவராசா கௌதமன் (யா/இந்துக் கல்லூரி), செல்வரூபன் சரண்ஜா (கனகரத்தினம் மத்திய ம. வி.).
* திறந்த போட்டி- அரியாலையூர்சி.சிவதாசன், தர்சினி நவரட்ணராஜா, சண்முகலிங்கம் சுரேஸ்குமார்.

கவிதை

* கனிஷ்ட பிரிவு- ஜெயராமன் ஸ்ரீகுமரன் (நல்லூர் இ.த.பெ.பா), சங்கீதா அருந்தவநாதன் (நல்லூர் இ.த.பெ.பா), பிரேமதாஸ் குமாரசிறி றோயல்றட்ணசிறி(யாழ்இந்துக் கல்லூரி)
* சிரேஷ்ட பிரிவு- மகேந்திரராஜா துவாரகன் (யாழ்.இந்துக் கல்லூரி), வஜிதா தவராஜா (யாழ்.இந்து மகளிர் கல்லூரி), கஜேந்தினி சிவலிங்கம் (யாழ்.இந்து மகளிர் கல்லூரி), சயானா நித்தியானந்தன் (யாழ்.இந்து மகளிர் கல்லூரி).
* திறந்த போட்டி- அரியாலையூர் சி.சிவதாசன், செல்லப்பா பஞ்சநாதன், இரட்ணபிரபாகரசர்மா ஸ்ரீகயலக்ஷ்மி

கட்டுரை ஆக்கம்

* கனிஷ்ட பிரிவு- ரவீந்திரராஜா வித்தியாசங்கர் (யாழ்.இந்துக் கல்லூரி), மெசிஞானரூபி ஆனந்தகுமார்(யாழ்.இந்து மகளிர் கல்லூரி) , மோகனராஜா தனுசா (யாழ். கொக்குவில் கிழக்கு நாமகள் வி.)
* சிரேஷ்ட பிரிவு- கலொக் கணநாதன் உஷாந்தன் (யாழ்.இந்துக் கல்லூரி), பிரசாங்க சந்திரகுமார் (யாழ். செங்குந்தா இந்துக்கல்லூரி), நாகநந்தினி நாகரெத்தினம் (யாழ். செங்குந்தா இந்துக்கல்லூரி)

பாடலாக்கம்

* திறந்த போட்டி- அரியாலையூர் சி.சிவதாசன், செல்லப்பா பஞ்சநாதன், இரட்ணபிரபாகரசர்மா ஸ்ரீகயலக்ஷ்மி

### சிறுவர் முகாம்

விசேட தேவையுடைய மாணவர்களுக்கான சிறுவர் முகாம் நாளை வியாழக் கிழமை காலை 8.30மணிக்கு யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் இடம் பெறவுள்ளது. (-1)

### திருத்தி வாசிக்கவும்

நேற்றைய உதயனில் 4ஆம் பக்கத்தில் வெளியான வல்லிபுரம் மாசிலாமணி என்பவரின் மரண அறிவித்தல் -

மரணமானவரின் பிள்ளைகள் என்ற வரியில் காலஞ்சென்ற சுவர்ணா என்பது தவறுதலாக விடுபட்டது. அதனையும் சேர்த்து திருத்தி வாசிக்கவும்.

### மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1969 ஆம் ஆண்டு பிறந்த ரோகினி நட்சத்திரம்,4 இல் செவ்வாயுடைய வெளிமாவட்டத்தில் ஆசிரியராகக் கடமை புரியும் மணமகனுக்கு படித்த நற்பண்புள்ள மணமகள் தேவை (தொழில் புரியாதோர் விரும்பத்தக்கது) [illegible]

## அளவெட்டி அருள்மிகு அழகொல்லை விநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவ விஞ்ஞாபனம்

முன்னவனே யானை முகத்தவனே முத்தி நலம்
சொன்னவனே தூய மெய்ச் சுகத்தவனே - மன்னவனே
சிற்பரனே ஐங்கரனே செஞ்சடை யஞ் சேகரனே
தற்பரனே நின்தாள் சரண்

| | | | |
|---|---|---|---|
| கொடியேற்றம் | 10.04.2008 | வியாழக்கிழமை | காலை 10 மணி |
| சப்பறத்திருவிழா | 18.04.2008 | வெள்ளிக்கிழமை | மாலை 3 மணி |
| இரதோற்சவம் | 19.04.2008 | சனிக்கிழமை | காலை 10 மணி |
| தீர்த்தோற்சவம் | 20.04.2008 | ஞாயிறு | காலை 8 மணி |

அன்பர்கள் அடியார்கள் அனைவரும் விழாக்காலங்களில் கலந்து கொண்டு விநாயகப் பெருமானின் திருவருளைப் பெற்றுய்வீர்களாக.

(சி/552239) ஆலயகுரு இரத்தின ஐயரும் தர்மபரிபாலன சபையினரும்

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



விடத்தற்பளை, மிருசுவில் நித்தியானந்தசோதி மல்லிகாதேவி தம்பதியரின் புதல்வியும் எங்கள் மைத்துனியுமான (மச்சியும்) செல்வி

### நி.டியானி

(யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி) 2007 இல் க.பொ.த (சா.த.) பரீட்சையில் உயர் பெறுபேறு 9AB பெற்றதையிட்டு பாராட்டி வாழ்த்துவதோடு இவர் மேலும் பல வெற்றிகளைப் பெற்று சிறப்புடன் விளங்க வேண்டுமென வாழ்த்துகின்றோம்.

உசன், மிருசுவில். (72947)

வைதேகன் - வைஷாலிகா, செல்வா அத்தை, மாமா.

## 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 26 ★ 12 ★ 1942



உதிர்வு 30 ★ 03 ★ 1998

### அமரர் சு.இரத்தினராசா

(முன்னாள் கல்விப் பணிப்பாளர்- வலயம் 1)

பிறர் பிள்ளை தலை தடவ
தன் பிள்ளை தானாக வளரும்
எனும் படி வாழ்ந்திருந்தீர்
உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்:

'மாணிக்கம்', கோக்குவில் மேற்கு. (72949)

மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.மாவட்டத்தில் கடந்த வருடம் வசித்தோரின் எண்ணிக்கை 608,919 பேர் என மதிப்பீடு

குருநகர்,ஏப்.9

யாழ்.மாவட்டத்தில் பிரதேச செயலர் பிரிவுகள் ரீதியாக திரட்டப்பட்ட தரவுகளின்படி கடந்த ஆண்டில் யாழ்.மாவட்டத்தில் வசித்தோரின் மொத்தச் சனத்தொகை 6லட்சத்து 8 ஆயிரத்து 919 என யாழ்.மாவட்டச் செயலகத்தின் புள்ளி விவரக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் 180 ஆயிரத்து 216 குடும்பங்கள் உள்ளன எனவும் இத் தரவுகள் வெளிப்படுத்துகின்றன.

யாழ்ப்பாணப் பிரதேச செயலாளர் பிரிவில் 15 ஆயிரத்து 311 குடும்பங்களைச் சேர்ந்த 54 ஆயிரத்து 156 அங்கத்தவர்களும்-

நல்லூர்ப் பிரதேச செயலாளர் பிரிவில் 23 ஆயிரத்து 111 குடும்பங்களைச் சேர்ந்த 73ஆயிரத்து 763 உறுப்பினர்களும்-

கோப்பாய் பிரதேச செயலாளர் பிரிவில் வலிகாமம் கிழக்கு 21 ஆயிரத்து 855 குடும்பங்களைச் சேர்ந்த 75 ஆயிரத்து 984 உறுப்பினர்களும்-

சண்டிலிப்பாய் (வலிகாமம் தென்மேற்கு) பிரதேச செயலாளர் பிரிவில் 17 ஆயிரத்து 565 குடும்பங்களைச் சேர்ந்த 62 ஆயிரத்து 995 உறுப்பினர்களும் -

தெல்லிப்பழை (வலி.வடக்கு) பிரதேச செயலர் பிரிவில் 7 ஆயிரத்து 632 குடும்பங்களைச் சேர்ந்த 26 ஆயிரத்து 542 உறுப்பினர்களும்-

சங்கானை (வலி.மேற்கு) பிரதேச செயலாளர் பிரிவில் 14 ஆயிரத்து 549 குடும்பங்களைச் சேர்ந்த 49 ஆயிரத்து 993 உறுப்பினர்களும் -

கரவெட்டிப் பிரதேச செயலர் (வடமராட்சி தென்மேற்கு) பிரிவில் 15 ஆயிரத்து 21 குடும்பங்களைச் சேர்ந்த 48 ஆயிரத்து 241 உறுப்பினர்களும்-

பருத்தித்துறை (வடமராட்சி வடக்கு) பிரதேச செயலாளர் பிரிவில் 14 ஆயிரத்து 687 குடும்பங்களைச் சேர்ந்த 50 ஆயிரத்து 141 உறுப்பினர்களும்-

மருதங்கேணி (வடமராட்சி கிழக்கு) பிரதேச செயலர் பிரிவில் 975 குடும்பங்களைச் சேர்ந்த 3 ஆயிரத்து 481 உறுப்பினர்களும் -

உடுவில் (வலி.தெற்கு) பிரதேச செயலாளர் பிரிவில் 17 ஆயிரத்து 497 குடும்பங்களைச் சேர்ந்த 52 ஆயிரத்து 633 உறுப்பினர்களும் -

சாவகச்சேரிப் பிரதேச (தென்மராட்சி) செயலர் பிரிவில் 19 ஆயிரத்து 237 குடும்பங்களைச் சேர்ந்த 68 ஆயிரத்து 82 உறுப்பினர்களும்-

வேலணை (தீவகம் தெற்கு) பிரதேச செயலர் பிரிவில் 3 ஆயிரத்து 988 குடும்பங்களைச் சேர்ந்த 14 ஆயிரத்து 686 உறுப்பினர்களும் -

ஊர்காவற்றுறை (தீவகம் வடக்கு) செயலாளர் பிரிவில் 4 ஆயிரத்து 174 குடும்பங்களைச் சேர்ந்த 13 ஆயிரத்து 835 உறுப்பினர்களும் -

காரைநகர் பிரதேச செயலர் பிரிவில் 3 ஆயிரத்து 83 குடும்பங்களைச் சேர்ந்த 9 ஆயிரத்து 327 உறுப்பினர்களும்-

நெடுந்தீவு பிரதேச செயலர் பிரிவில் ஆயிரத்து 531 குடும்பங்களைச் சேர்ந்த 5 ஆயிரத்து 60 உறுப்பினர்களும் வசித்து வருகின்றார்கள் என இப் புள்ளி விவரங்கள் குறிப்பிட்டுள்ளன. (202-51)

## வேலணைக் கோட்ட மெய்வன்மைப் போட்டி

வேலணை,ஏப்.9

வேலணைக் கோட்டத்துக்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான மெய்வன்மைப் போட்டிகள் நாளையும் மறுதினமும் இடம்பெறவுள்ளன.

புங்குடுதீவு உப கோட்டப் பாடசாலைகளுக்கிடையிலான போட்டிகள் நாளை வியாழக்கிழமை புங்குடுதீவு மகா வித்தியாலயத்திலும் -

வேலணை உப கோட்டப் பாடசாலைகளுக்கிடையிலான போட்டிகள் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை வேலணை மத்திய கல்லூரியிலும் இடம்பெறவுள்ளன. (1)

குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

## கலைத்திறன்காண் விழா

யாழ்ப்பாணம்,ஏப்.9

வல்வெட்டித்துறை கொத்தணி முன்பள்ளிகளின் கலைத்திறன் காண் விழா இன்று புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

வல்வை கொத்தணி முன்பள்ளிகளின் தலைவர் மு.ரவீந்திரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகத் தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலய அதிபர் வ.கணேசமூர்த்தி கலந்துகொள்வார். (202)

## பன்றித்தலைச்சி அம்மன் ஆலய உற்சவம் பக்திபூர்வமாக நடந்தேறியது

யாழ்ப்பாணம்,ஏப்.9

மட்டுவில் பன்றித்தலைச்சி கண்ணகை அம்மன் ஆலய பங்குனித் திங்கள் உற்சவம் நேற்று முன்தினம் சிறப்பாகவும் பக்தி பூர்வமாகவும் நடைபெற்றது.

ஆலயச் சூழல் பக்தர் கூட்டத்தால் நிரம்பி வழிந்தது. ஆலயச் சூழலில் அம்பாள் அடியார்கள் நேர்த்திக் கடன்களை நிறைவேற்றுவதைக் காணமுடிந்தது.

ஆலய வீதிகள் சூழ அடியார்கள் பானை வைத்து பொங்கியதைக் காணமுடிந்தது. ஆலயத்தில் அன்னதானங்கள், தண்ணீர்ப் பந்தல்கள் நிறையவே காணப்பட்டன.

பக்தர்களின் காவடிகள், பறவைக்காவடிகள் எனப் பல கோயிலை வந்தடைந்தன.

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தினர், சாரண மாணவர்கள், இந்து இளைஞர்கள் எனப் பொது அமைப்புகள் சேவைகளை வழங்கின.

போக்குவரத்து வசதிகள் வடபிராந்திய போக்குவரத்துச் சபையால் சகல பகுதிகளிலும் இடம்பெற்றது.

நண்பகலிலும் மாலையும் அம்பாள் திருவுலா இடம்பெற்றது. (202-131)

## 2007 ஆம் ஆண்டில் யாழ்.மாவட்டத்தில் பிறந்த குழந்தைகளின் எண்ணிக்கை 7,748

யாழ்ப்பாணம்,ஏப்.9

யாழ்.மாவட்டத்தில் கடந்த வருடத்தில் 7 ஆயிரத்து 748 குழந்தைகள் பிறந்துள்ளன. யாழ்.பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகம் திரட்டிய புள்ளி விவரத்தில் இவ்விவரம் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு காலப்பகுதியில் யாழ்.மாவட்டத்தில் பிறந்த குழந்தைகளில் தற்போது 7 ஆயிரத்து 671 குழந்தைகள் உயிருடன் உள்ளனர். 77 குழந்தைகள் பிரசவத்தின்போதே இறந்து பிறந்துள்ளன.

யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின் கீழ் இயங்கும் அரச வைத்திய நிலையங்களில் ஆயிரத்து 942 பிரசவங்கள் நடைபெற்றுள்ளன. இப் பிரசவங்களில் 12 குழந்தைகள் இறந்த பிறந்துள்ளன. தற்போது ஆயிரத்து 930 குழந்தைகள் உயிருடன் உள்ளார்கள்.

யாழ்.போதனா வைத்தியசாலையில் இக் காலப்பகுதியில் 5 ஆயிரத்து 507 பிரசவங்கள் நடைபெற்றுள்ளன. இவற்றுள் 65 குழந்தைகள் இறந்து பிறந்துள்ளன. தற்போது 5 ஆயிரத்து 442 குழந்தைகள் உயிருடன் உள்ளார்கள்.

யாழ்.மாவட்டத்தில் இயங்கி வரும் மூன்று தனியார் வைத்திய நிலையங்களில் 229 பிரசவங்கள் நடைபெற்றுள்ளன. திருச்சிலுவை சுகநல நிலையத்தில் 189 பிரசவங்களும் -

திருநெல்வேலி சென்றல் நேர்ஷிங் ஹோமில் 39 பிரசவங்களும்-

மானிப்பாய் கிறீன் மெமோறியல் ஆஸ்பத்திரியில் ஒரு பிரசவமும் நடைபெற்றுள்ளன.

இதேநேரத்தில் இக்காலப்பகுதியில் வீடுகளிலும் 70 பிரசவங்கள் நடைபெற்றுள்ளன. (202-300)

## ஊரெழு மேற்கில் கசிப்பு உற்பத்தி தீவிரம்

நாவற்குழி,ஏப்.9

ஊரெழு மேற்குப் பிரதேசத்தில் சட்ட விரோத கசிப்பு உற்பத்தியும் விற்பனையும் மிகத் தீவிரமாக நடைபெற்று வருவதாக அப் பகுதி மக்களால் முறைப்பாடு தெரிவிக்கப் படுகின்றது.

ஊரெழு மேற்குப் பகுதியில் இக்கசிப்பு விற்பனையால் தினமும் சண்டைகள் இடம் பெற்று வருவதாகவும் அத்துடன் கசிப்பு குடிக்க வருவோர் திருட்டு முயற்சியிலும் ஈடுபட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

எனவே இவ்விடயத்தில் சம்பந்தப்பட்டோர் கவனமெடுத்து உற்பத்தியையும் விற்பனையையும் உடன் நிறுத்தவேண்டும் எனவும் பலராலும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (202-288)



பண்டத்தரிப்பு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டமும் பன்முகப் படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்டத்தின்கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி மூலம் சங்க முன்றிலில் நிறுவப்பட்ட குழாய்க்கிணறு திறப்பு விழாவும் அண்மையில் நடைபெற்றன.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட சண்டிலிப்பாய் பிரதேச கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி சு.சுதாகர் சம்பிரதாய முறைப்படி குழாய்க்கிணற்றிலிருந்து தண்ணீர் எடுப்பதையும் அருகில் சங்கத் தலைவர் ச.செல்வரத்தினம், செயலாளர் அருள்விநாயகம் மற்றும் சங்க உறுப்பினர்கள் நிற்பதையும் படத்தில் காணலாம். *(படம்: வலி.மேற்குச் செய்தியாளர்)*

## கூட்டுறவு ஆணையாளர் அடுத்த வாரம் யாழ்.வருகை

யாழ்ப்பாணம்,ஏப்.9

வடக்கு மாகாணக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் சுப்பிரமணிய சர்மா அடுத்தவாரம் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் ஒன்றை மேற்கொள்ள வுள்ளதாகத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ்ப்பாணம் வருகை தரும் ஆணையாளர் கூட்டுறவுச் சங்கப் பிரதிநிதிகள் மற்றும் கூட்டுறவுத் திணைக்கள அதிகாரிகளைச் சந்தித்து கலந்துரையாடவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

(202-224)

## வாழ்வாதாரத் திட்டத்தின்கீழ் 18 பேருக்கு நிதியுதவி

நாவற்குழி,ஏப்.9

கைதடி கிழக்கு கிராமசேவகர் பிரிவைச் சேர்ந்த விதவைகள் மற்றும் கணவனால் கைவிடப்பட்ட குடும்பத் தலைவிகள் 18 பேருக்குச் சிறுவர் பாதுகாப்பு (இலங்கை) நிறுவனம் வாழ்வாதாரத் திட்டத்தின்கீழ் மாதாந்த உதவித்தொகையை கடந்த தை மாதம் தொடக்கம் வழங்கி வருகிறது.

அப்பகுதி கிராமசேவையாளர் கு.சிவகுலசிங்கம் இத்தகவலைத் தெரிவித்துள்ளார்.

குடும்ப அங்கத்தவர் ஒருவருக்கு 1250 ரூபா வீதம் குடும்ப எண்ணிக்கையைப் பொறுத்து இத்தொகை அதிகரிக்கப்பட்டு வழங்கப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (202-288)

# இல.787,788 வழியிலான சிற்றூர்திச் சேவை போக்குவரத்துச் சட்டங்களுக்கமைய நடைபெறும்

## யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.9

பண்டத்தரிப்பு சந்தியூடான 787, 788 வழியிலான சிற்றூர்திகளின் போக்குவரத்துச் சேவை மோட்டார் போக்குவரத்துச் சட்டங்களுக்கு அமைய குறிப்பிட்ட ஒழுங்கில் நடைபெறும் என யாழ்.அரச அதிபர் கே. கணேஷ் அறிவித்துள்ளார்.

கடந்த 31ஆம் திகதி யாழ்.செயலகத்தில் யாழ்.மாவட்ட தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கங்களின் தலைமைச் செயலகத்தினர் மற்றும் 787, 788 வழி சிற்றூர்திச் சங்கச் செயற்குழுவினர் ஆகியோருடன் யாழ். அரச அதிபர் கலந்துரையாடல் ஒன்றை நடத்தினர்.

அக்கலந்துரையாடலிலேயே மேற்படி தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாக அரச அதிபர் தெரிவித்தார்.

இது தொடர்பாக அரச அதிபர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

787 வழியில் (மாதகல் - யாழ்ப்பாணம்) செயலாற்றும் சிற்றூர்திகள் பண்டத்தரிப்புச் சந்தியில் உள்ள சுற்று வட்டத்தில் இருந்து 50 மீற்றர் தூரத்துக்கு அப்பால் உள்ள பஸ் தரிப்பிடங்களிலேயே பயணிகளை ஏற்றி இறக்கமுடியும். அதேபோன்று 788 வழியில் (இளவாலை - யாழ்ப்பாணம்) செயலாற்றும் சிற்றூர்திகள் பண்டத்தரிப்புச் சந்தியில் உள்ள சுற்று வட்டப் பாதைக்கு முன் சுமார் 50 மீற்றர் தூரத்திலுள்ள தென்னிந்திய திருச்சபைக்கு முன்பாக பயணிகளை இறக்கிவிட்டு சுற்று வட்டம் வழியே சென்று திரும்பி மீண்டும் சுற்றுவட்டத்திலிருந்து சுமார் 50 மீற்றர் தூரத்துக்கு அப்பால் உள்ள முத்துமாரி புடைவை அன்ட் பான்சி கவுஸிற்கு முன்னால் பயணிகளை ஏற்றிச் செல்லுதல்வேண்டும்.

மேலும் இவ்விடயங்கள் தொடர்பில் ஏற்கனவே 08.03.2008 ஆம் திகதி நடைபெற்ற கலந்துரையாடலில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 788 வழியில் சேவையாற்றும் சிற்றூர்திகள் தங்களின் வழியை விலத்திச் சென்று பயணிகளை ஏற்றுவதை அனுமதிக்கமுடியாது எனவும், பாடசாலை மாணவர்களின் நலனைக் கருத்திற்கொண்டு 788 வழியில் சேவையாற்றும் சிற்றூர்திகள் காலை 7.30 மணி தொடக்கம் 8.30 மணிவரையும் மாலை 2.15 மணி தொடக்கம் 3 மணி வரையுள்ள காலப் பகுதியில் 03 சிற்றூர்திகள் வீதம் சுற்றுவழி வரை சென்று மாணவர்களை இறக்கி ஏற்றுவது என்றும் ஏனைய நேரங்களில் 788 வழியில் சேவையாற்றும் சிற்றூர்திகள் தமது வழமையான வழியில் சேவையாற்றும் என இரு சிற்றூர்திச் சங்கத்தினரும் சம்மதத்துடன் முடிவுகள் எடுக்கப்பட்டபோதும் இந்நடைமுறையை 788 சங்கத்தினர் நடைமுறைப்படுத்தாததாலேயே மாணவர்களும் பொதுமக்களும் பலத்த சிரமங்களுக்கு உள்ளாகியமை இங்கு குறிப்பிடத்தக்கது - என்றார். (202)

புத்தாண்டு அன்பளிப்புகள்
எதிர்வரும் சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு
07.04.2008 முதல் 15.04.2008 வரை
WESTERN UNION®
வெஸ்ரேண் யூனியன் மூலம் எம்மிடம்
ஒரு சில நிமிடங்களில் பணத்தைப் பெறுவதுடன்
அளப்பரிய பரிசில்களையும் பெற்றுக்கொள்ள
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
NO, 303 K.K.S.ROAD, JAFFNA.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# COMPUTER EXPRESS
INSTITUTE OF INFORMATION TECHNOLOGY
#15, Sirambiyadi Lane, Jaffna *Branch* : #167, Kasthuriyar Rd, Jaffna
Phone : 021 222 8250 , 0777 222422

## மாபெரும் புலமைப்பரிசில் திட்டம் 2008 80% off

அனைவருக்கும் புலமைப்பரிசில்

| | | |
|---|---|---|
| Diploma in Computer Science 4 Months ~~10,750~~ 2,150 | Honours Diploma in Computer Science 5 Months ~~13,000~~ 2,600 | Diploma in Web page Designing 4 Months ~~10,750~~ 2,150 |
| Diploma in Graphic Desining 4 Months ~~10,750~~ 2,150 | Diploma in Desktop Publishing 4 Months ~~10,000~~ 2,000 | Diploma in Hardware Engineering 3 Months ~~10,000~~ 2,000 |
| Diploma in Auto CAD 3 Months ~~10,000~~ 2,000 | Diploma in Microsoft Office 3 Months 1,500 | Accounting Package 3 Months ~~10,750~~ 2,150 |

50% Off ADVANCE COURSES

| | | |
|---|---|---|
| Diploma in Multimedia | ~~5500~~ | 2750 |
| Diploma in Video Editing | ~~6500~~ | 3250 |

கம்பியூட்டர் எக்ஸ்பிரஸ் ஆசிரியர் குழாமினால் வகுப்புக்கள் நடாத்தப்படும். சர்வதேச அங்கீகாரம்பெற்ற சான்றிதழ். வரையறுக்கப்படாத கணனிப்பயிற்சி.

வகுப்புக்கள் ஆரம்பம் :
Batch I : 11/04/2008 10AM
Batch II : 12/04/2008 11AM
Batch III : 13/04/2008 11AM
Batch IV: 16/04/2008 10AM

3 மாதகால Diploma in Computerized Accounting வகுப்புக்கள் ஆரம்பமாகின்றது.
Batch I : 19/04/2008, Batch II : 20/04/2008 02PM பதிவுகள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது.


ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமஹ

# திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான சர்வசித்து வருஷம் பங்குனித் திங்கள் 29ஆம் நாள் (11.04.2008) வெள்ளிக்கிழமை காலை 8.12 மணிமுதல் 10.00 மணிவரையுள்ள மிருகசீரிட நட்சத்திரமும் கன்னிலக்கினமும் அமிர்த சித்தயோகமும் கூடிய சுபமுகூர்த்த சுபவேளையில்

திரு.திருமதி வ.இராசதுரை தம்பதியரின் புத்திரன் திருநிறை செல்வன் **ஜீவகாந்தன்** அவர்களுக்கும்

திரு.திருமதி க.சுப்பிரமணியம் (சிறுவிளான்) தம்பதியரின் புதல்வி திருநிறை செல்வி **உதயசாந்தி** அவர்களுக்கும்

இறைவன் துணைகொண்டு திருநெல்வேலி ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தான மண்டபத்தில் திருமாங்கல்ய தாரணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்களும் குடும்ப சகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்து தொடர்ந்து நடைபெறும் மதியபோசன விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்:

திரு.வ.இராசதுரை
குடும்பத்தினர்,
பத்திரகாளி கோயிலடி,
திருநெல்வேலி.

நி.மு.: திரு.க.சுப்பிரமணியம்
குடும்பத்தினர்,
சிறுவிளான், இளவாலை,
த.மு: க.சுப்பிரமணியம்,
பத்திரகாளி கோயிலடி, திருநெல்வேலி.

(இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)
(இருவீட்டார் அழைப்பு)

*14.04.2008 திங்கட்கிழமை மணமகள் இல்லத்தில் விருந்துபசாரம் நடைபெறும்.

(சி/552237)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



சாவகச்சேரி, சங்கத்தானையைச் சேர்ந்த திரு.திருமதி **சத்தியசீலன்** தம்பதியரின் செல்வப் புதல்வி செல்வி **கஜலக்ஷனா சத்தியசீலன்** (மாணவி, யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை) அவர்கள் கடந்த வருடம் நடைபெற்ற க.பொ.த. (சா/த) பரீட்சையில் அனைத்துப் பாடங்களிலும் அதிவிசேட சித்திகளை (10A) பெற்றமையை பாராட்டி வாழ்த்துவதோடு, இவர் மேலும் பல்கலையும் பெற்று பல்லாண்டு காலம் சீரும் சிறப்புடனும் வாழ, கருணைக்கடலாம் எல்லாம் வல்ல மீனாட்சி அம்பாளைப் பிரார்த்திக்கின்றோம்.

இவருடைய பெறுபேற்றிற்கு உந்து சக்தியாக விளங்கிய கல்லூரி அதிபர், ஆசிரியர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

கதிர் வெல்டேர்ஸ்,
டச் வீதி, சாவகச்சேரி. (72940)

வாழ்த்துபவர்:
பெரியப்பா.


இதோ,

இளமைத் துடிப்புமிக்க முழுமையான, திருப்திகரமான, இன்பத்தைப் பெற்று, உங்கள் உடலில் ஜீவசக்தியைப் பெருகச் செய்து, பூரிக்கச் செய்வதற்கும் விரயமாகும் உங்கள் சக்தியை விரைவில் புனரமைப்பதற்கும் நரம்புத்தளர்ச்சி, மூட்டுவலி, கடுப்பு நோவு ஆகியவற்றை நீக்கி உடலுக்கு உயிர் துடிப்பையும் வாலிபத்தின் வனப்பையும் பெறுவதற்கும் பாவியுங்கள்!

100% இளமையையும் வலிமையையும் தரும்

சித்தாரா முடக்கத்தான் அமுக்கரா சிரப்

யாழ்.குடாநாட்டின் அனைத்துப் பார்மசிகளிலும் கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

Manufactured By:-
SITHARA PRODUCTS
Puttalam Road, Chilaw.
(Reg.No:- 6382) AR/PR/No: 228
(சி/54611)

யாழ்.மாவட்ட ஏகவிநியோகஸ்தர்:
சிவா நறுமணப்பூங்கா
இல.288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(குறிப்பு:- சத்திரச்சந்திக்கு அண்மையில்)


## கண்ணீர் அஞ்சலி

எமது கூட்டுறவுத் திணைக்கள கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர் இ.விஜயமோகனராஜா அவர்களின் அன்புத்தந்தை அமரர் வேலன் இராசையா அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு, அன்னாரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

நலன்புரிச் சங்கம்,
யாழ்.கூட்டுறவு உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்.
(72936)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி சின்னராஜா சிவமணி

கடந்த (22.03.2007) அன்று சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வம் சின்னராஜா சிவமணி அவர்களின் முதலாம் ஆண்டுக் கிரியைகள் இன்று (09.04.2008) புதன்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.

செல்வநாயகம் வீதி,
கோண்டாவில் கிழக்கு. (72942)

கணவர் -சின்னராஜா
பிள்ளைகள், மருமக்கள்.

## மீசாலை விக்கினேஸ்வரா ம.வியின் கலையரங்கு புனரமைப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.9

மீசாலை விக்கினேஸ்வரா மகா வித்தியாலய கலையரங்கு ஒன்றரை லட்சம் ரூபா செல வில் புனரமைக்கப்படவுள்ளது.

கடந்த 2000ஆம் ஆண்டு யுத்த அனர்த்த வேளையில் சேதமடைந்து உருக்குலைந்த நிலையில் காணப்பட்ட கலையரங்குக் கட்டடத்தினை புனரமைக்க வித்தியாலய ஸ்தாபகரின் மகனான கார்த்திகேசு நடராஜலிங்கம் ஒன்றரை லட்சம் ரூபாவினை வழங்கியுள்ளார்.

கட்டட புனரமைப்புக்கான ஆரம்ப கட்ட வேலைகள் நேற்று கா.நடராஜலிங்கம் ஆரம்பித்து வைக்கப் பட்டதாக வித்தியாலய அதிபர் கு.கதிர்காமசேகரர் தெரிவித்தார்.(202-207)

## வலி. கிழக்கு பிரதேச முன்பள்ளி மாணவர்களுக்கு சத்துணவு விநியோகம்

வலி.கிழக்கு பிரதேச சபையில் பதிவு செய்யப் பட்ட முன்பள்ளிகளில் கற்கும் மாணவர்களுக்கான சத்துணவு விநியோகம் (ஜீவாகாரம், சீனி) நாளை வியாழக் கிழமை காலை 9.30மணிக்கு பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் முன்பள்ளி ஆசிரியர்கள் அனைவரும் தவறாது வருகை தந்த பெற்றுக் கொள்ளுமாறு வலி. கிழக்கு பிரதேச சபையின் செயலாளர் கேட்டுள்ளார். (202-207)

## கரபந்தாட்டப் போட்டி

வலி.வடக்கு,ஏப்.9

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கிடையேயான ஆண்களுக்கான- கரபந்தாட்டச் சுற்றுப் போட்டிகள் இன்று காலை 8 மணிக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளன. 15, 17, 19 வயதுப் பிரிவினருக்கு இடையேயான போட்டிகள் இடம்பெறவுள்ளன. (202-186)

## அதிபர்களுக்குக் கூட்டம்

யாழ்ப்பாணம்,ஏப்.9

தென்மராட்சி கல்வி வலய பாடசாலைகளின் அதிபர்களுக்கான கூட்டம் நாளை காலை 9 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

பாடசாலை வங்கிக் கணக்கு விவரம், டிசெம்பர், மார்ச் ஆகிய மாதங்களில் வங்கிக் கூற்று, தர உள்ளீட்டுக் கணக்கு மீதிகள் ஆகியவற்றினை கூட்டத்திற்கு கொண்டு வருமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் அறிவித்துள்ளார். (202-207)


## தேவை

பிரிண்டர், உதவியாளர்கள்
(பழக விரும்புபவர்களும் விண்ணப்பிக்கலாம்).
[illegible]
22/1 [illegible] யாழ்ப்பாணம்.
(சி/552235)


## யாழ்.சுண்டிக்குளி மகளிர் கல்லூரி க.பொ.த.(உ.த) அனுமதி- 2010

க.பொ.த.(உ.த) கலை, வர்த்தக, கணித, விஞ்ஞான பிரிவுகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. காரியாலயத்தில் விண்ணப்பப் படிவத்தைப் பெற்று 18.04.2008 அன்று அல்லது அதற்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.

விண்ணப்பதாரிகள் 01.02.1991இல் அல்லது அதற்குப்பின் பிறந்திருத்தல் வேண்டும்.

அதிபர்
சுண்டிக்குளி மகளிர் கல்லூரி,
யாழ்ப்பாணம்.
(சி/552233)

## மரண அறிவித்தல்

### தம்பு இராமலிங்கம் நடராஜா

(ஓய்வுபெற்ற முகாமையாளர், இலங்கை வங்கி )



அராலி தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராமலிங்கம் நடராஜா நேற்று (08.04.2008) செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம்- ஆச்சிமுத்து தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற பரமேஸ்வரி மற்றும் விஜயலட்சுமி ஆகியோரின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற திரு.திருமதி விஸ்வலிங்கம் தம்பதியரின் (மலேசியா), காலஞ் சென்ற வீரகத்தி மற்றும் நல்லம்மா ஆகியோரின் அன்பு மருமகனும் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம், தம்பிராசா, இரத்தினசிங்கம், சிவபாக்கியம், இராசமணி ஆகியோரின் அன்புச் சகோதரனும் தில்லைகண்ணன், ஜெயகாந்தன் (யாழ். மாநகரசபை) ஆகியோரின் பாசமிகு தந்தையும் தர்சனியின் மாமனும் இராமலிங்கம் (பொறியியலாளர்,U.K.), பூபாலசிங்கம் (பொறியியலாளர்,U.K.), வள்ளிநாயகி (வைத்தியர்-நியூசிலாந்து), நித்தியானந்தன் (வங்கி முகாமையாளர்- கனடா), குகதாஸ் (பல் வைத்தியர்- கொழும்பு), வனிதா (கனடா), தேவதாஸ் (சட்டத்தரணி- கனடா) ஆகியோரின் தாய் மாமனும் காலஞ்சென்ற கந்தசாமி மற்றும் கந்தராசா (சங்கானை வைத்தியசாலை) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.04.2008) புதன் கிழமை மு.ப.9 மணியளவில் அவரின் இல்லத்தில் நடை பெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக அராலி பூனாவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அராலி தெற்கு,
வட்டுக்கோட்டை.
077 9688336. (72947)

தகவல்:
N.ஜெயகாந்தன்
(மகன்).


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொழியும் நிர்வாகமும்

சீன தத்துவஞானி கன்ஃபூஸியஸ் என்பவரிடம் அவருடைய சீடர் ஒருவர் தேச நிர்வாகத்தை ஒப்படைத்தால் தாங்கள் செய்யும் முதல் வேலை என்ன? என்றார்.

"நிச்சயமாக மொழியைச் சீர்திருத்துவதுதான்" என்றார் அவர். அங்கு குழுமி இருந்தோர் மிக்க ஆச்சரியம் அடைந்து மொழிக்கும் நிர்வாகத்திற்கும் சம்பந்தம் என்னவோ? என்றார்கள்.

மொழி செம்மை பெறாவிடில் எதைச் சொல்ல விரும்புகிறார்களோ அதைக் கேட்கிறவர்கள் தெளிவுற, ஐயம் திரிபு அற அறிந்துகொள்ளும் முறையில் சொல்ல முடியாது. நினைக்கப்பட்டது சொல்லப்படவில்லையானால் எது செய்யப்பட வேண்டுமோ அது நிறைவேறாது. நிறைவேற வேண்டியது நிறைவேறாமல் போகும். ஒழுக்கமும் பண்பும் குறையும். நீதியும் நியாயமும் திரியும். மயக்கமும் குழப்பமும் உண்டாகும். எனவே சொல்லப்படுவதில் ஐயம் எதுவும் இல்லாமல் தெளிவாக இருக்கவேண்டும். ஆகவே, மொழி செம்மையுற வேண்டியது எல்லாச் செயலுக்கும் முன் நிற்கிறது" என்றார் கன்ஃபூஸியஸ்.



# நாக்கு

உள் இழுத்துக் கட்டிவைத்து
பல் சுவர் எழுப்பி
உதட்டு வேலி போட்டு
வைத்த பின்பும்
அடங்குவதாய் இல்லை
என் இல்லாளின் நாக்கு!



# செவ்வாயில் மனிதன் குடியேற

செவ்வாய்க் கிரகத்தில் இன்னும் 1700 ஆண்டுகளில் மனித இனம் குடியேறுவதற்கான வாய்ப்புகளை விஞ்ஞானிகள் ஏற்படுத்தித் தர இருக்கிறார்கள் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

மனிதன் வசிப்பதற்கு செவ்வாய்க் கிரகத்தில் பிராணவாயு தேவை. அதை அங்கு உருவாக்க 'நானோ' ரோபோக்களால் முடியும் என்று ஆய்வில் கண்டு பிடித்து அவற்றை செவ்வாய்க் கிரகத்திற்கு அனுப்பி வைக்க எண்ணம் கொண்டு உள்ளார்களாம்.

செவ்வாய்க் கிரகத்தில் விழுகின்ற சூரிய ஆற்றலை ஒன்று திரட்டுவதற்கு கொசு வலை போன்ற ஒரு வலைப் பின்னலை அந்தக் கிரகத்தின் மேல் போர்த்த விஞ்ஞானிகள் முடிவு செய்திருக்கிறார்கள். இந்த கொசு வலையை பிளாஸ்ரிக் போர்வை என்று விஞ்ஞானிகள் குறிப்பிடுகிறார்கள். இந்த பிளாஸ்ரிக் போர்வையை நானோ ரோபோக்கள் என்று சொல்லப்படுகின்ற மூலக்கூறு இயந்திரங்கள் தயார் செய்து விடும்.

செயற்கை தாவரங்களின் இழைப்பின்னல் தான் இந்த பிளாஸ்ரிக் போர்வை. இந்த பிளாஸ்ரிக் போர்வையின் வேலை என்ன தெரியுமா

## இழைப்பின்னல் பிளாஸ்டிக் போர்வை

சூரியனில் இருந்து செவ்வாய்க்கிரகத்தில் விழுகின்ற சூரிய ஒளியை முதலில் உள்வாங்கிக் கொள்ளும். பிறகு அந்த ஒளியிலிருந்து பிராண வாயுவை பிரித்து எடுக்கும். அதன் பின்னர் பிராண வாயுவை கிரகம் முழுவதும் வியாபிக்கச் செய்யும்.

அதே வேளையில் இந்த செவ்வாய் போர்வையினை அந்தரத்தில் மிதக்க வைக்க முடியாது. அதற்காக புதுமையான ஒரு முறையினை விஞ்ஞானிகள் கையாள முடிவு செய்து இருக்கிறார்கள். இந்த செவ்வாய் போர்வையை பின்னப் பயன்படுத்துவது நூலளவு உள்ள பிளாஸ்ரிக் மென்குழாய்கள் ஆகும். இந்த பிளாஸ்ரிக் இழைக் கண்ணியின் மூண்டு முடிச்சிலிருந்து அதே பிளாஸ்ரிக் மென்குழலை செவ்வாய்க் கிரக மேற் பரப்பில் வேரூன்ற நிறுத்தினால் நிலைமையை சமாளித்துவிடலாம் என்று விஞ்ஞானிகள் கருதுகிறார்கள்.

செவ்வாய்க் கிரகத்தின் தரைப்பரப்பில் கனிமச் சத்துக்கள், பனி உருகிய நீர் வளங்கள் எல்லாம் இருக்கின்றன. இவை பிளாஸ்ரிக் வேர் வழியாக உறிஞ்சப்பட்டு மேலே செலுத்தப்படும். இதற்கு சூரிய ஆற்றல், பாய்மம் (Solar energy) தேவை. இதற்கு நார்போர்னா டையின் என்கிற மூலக்கூறு அடிப்படையில் தயாரிக்கப்பட்ட வேதிம கூட்டுப்பொருள், திரவங்கள் பயன்படுத்தப்படும். இந்த வேதிம கூட்டுப்பொருளின் வேலை மிகவும் வியப்படைய வைக்கும் தன்மை கொண்டது.

இது செவ்வாய்க் கிரகத்தில் விழுகின்ற சூரிய ஒளியை உள்வாங்கிக் கொண்டு சேகரித்து வைக்கத் தொடங்கும். பிறகு தன்னுரு மாற்றி ரோபோக்களுக்குத் தேவைப்படும் போது சூரிய ஆற்றலை உமிழ்ந்து அவற்றுக்குச் சக்தியைக் கொடுக்கும். இத்தகைய அபூர்வ சக்தியை வேதிம கூட்டுப்பொருள் கொண்டிருக்கும். அதற்குப் பிறகு இன்னொரு முக்கியமான வேலை உள்ளது. சூரிய ஆற்றலை பிளாஸ்ரிக் நார்த் தண்டுகள் வழியாக மேல் நோக்கி உந்தித் தள்ள வேண்டும். இது கொஞ்சம் கடுமையான பணியாகும். ன்னோட்டிகள் (Linear electrostatic motors) இந்த வேலையைச் செய்யும். இந்த மின்னோட்டிகள் செயற்கை தசைகளால் உருவாக்கப்பட்டவை.


இந்தத் தசைகள் எக்கி எக்கி சூரிய ஆற்றல் பாய்மத்தினை மேலே ஏற்றும். சூரிய ஆற்றலின் மொத்த சக்தியை பிதுக்கி பிதுக்கி மேலே ஏற்றுகின்ற வேலையை இந்தத் தசைகள் மிகத் துல்லியமாக செய்யும் திறன் மிக்கவை என்பது குறிப்பிடத்தக்கது. ஒரு வேளை இந்த நார்போர்னா டையின் இந்த வேலையை செய்யத் தவறினாலோ அல்லது சுணக்கம் காட்டினாலோ அதற்கும் மாற்று வழியை விஞ்ஞானிகள் உருவாக்கி வைத்திருக்கிறார்கள். அது தான் மூலக்கூறு சுழலோட்டிகள் (Rotary moleculr motors)

சால்மோனெல்லா என்று சொல்லப் படுகின்ற ஒரு வகை நுண்ணுயிர்கள் கையாளும் கசையிழை (Flagella) போன்ற உயிரியல் முறைகள் இதை உயிருள்ள பிளாஸ்ரிக் தாவரங்களை வளர்க்கும் உத்தியாக விஞ்ஞானிகள் பயன்படுத்த இருக்கின்றார்கள்.

இதில் இன்னொரு பிரச்சினையும் இருக்கின்றது. சூரியப் போர்வையில் அழுத்தம் அதிகரிக்கப்படும் போது அதன் உள்ளழுத்தத்தால் சூரியப் போர்வை பறந்து விட வாய்ப்பு இருக்கின்றது. அல்லது பலூன் போல் உப்பி வெடித்தாலும் வெடிக்கலாம். இப்படி நடந்த விட்டால் செவ்வாய்க் கிரகத்தில் சூரியப் போர்வையை போர்த்தி மின்னாற்றலை உற்பத்தி செய்து செயற்கைத் தாவரங்களை உருவாக்கி பிராண வாயுவை உற்பத்தி செய்யும் விஞ்ஞானிகளின் கனவு ஒரு நொடியில் சிதைந்துபோகும்.

விஞ்ஞானிகளின் திட்டப்படி காற்றழுத்தமும் மனிதனுக்குத் தேவையான இதமான சூரிய வெப்பமும் கிடைத்துவிட்டால் விஞ்ஞானிகளின் முயற்சி வெற்றிக் கோட்டைத் தொட்டு விட்டது என்று அர்த்தம்.

செவ்வாயின் தரைப்பரப்பில் உறை பனிப்படலம் உருவாகும். கார்பனேட்டுப் பாறைகள் உண்டாகும். நிஜத் தாவரங்கள் வளரத் தொடங்கி விடும். அது மனித இனத்துக்கு பயன் தருகின்ற பல காரியங்களை செய்யத் தொடங்கிவிடும்.



பசுமையான காடுகளும் தாவரங்களும் நிறைந்து விட்டால் செவ்வாய் பரப்பில் பெரிய மாற்றம் ஏற்பட்டு விடும். அதன் தட்ப வெப்ப நிலையில் மாறுதல் ஏற்பட்டு மனிதன் வாழ்வதற்கு உகந்த நிலையை ஏற்படுத்தும்.

தூய்மையான காற்று வீசத் தொடங்கும். மனிதன் உண்பதற்கு தேவையான காய்களும் கனிகளும் தாவரங்களின் மூலம் கிடைக்க ஆரம்பிக்கும்.

மனிதன் மூச்சு விடுகின்ற போது கரியமில வாயு வெளியேற்றப்படும் அல்லவா அதை மரங்களும் செடி கொடிகளும் உறிஞ்சிக் கொண்டு மனிதனுக்குத் தேவையான பிராணவாயுவை வெளிவிடும்.

திமிங்கிலம் நீரில் வாழ்ந்தாலும் மீனைப் போன்ற உடலைக் கொண்டிருந்தாலும் அது மீனாகக் கணிக்கப்படுவதில்லை. முக்கிய காரணம் திமிங்கிலமானது குட்டியீன்று பாலூட்டும் ஒரு பிராணி என்பதே. திமிங்கிலம் நீர்வாழ் குட்டியீனும் பிராணி என்றாலும் அதன் மூதாதைகள் நிலத்திலேயே வாழ்ந்துள்ளன. பின்னர் ஆயிரமாயிரம் ஆண்டு காலம் நீரிலேயே வாழ்ந்து விட்டதால் அதன் உடலமைப்பு மீன்களைப் போல் அமைந்துவிட்டன என்கிறார்கள்.

மீனுக்கும் திமிங்கிலத்துக்குமுள்ள மிக முக்கிய வேறுபாடு என்னவென்றால் அதன் குட்டி

## திமிங்கிலம்: மீன் அல்ல அது ஒரு பாலூட்டி

தாயிடம் பால் குடித்து வளர்கிறது. மேலும் மீன்களைப் போல அது முட்டையிட்டு குஞ்சு பொரிப்ப தில்லை. குட்டி ஈன்றதன் பின் அக்குட்டி தாயின் அருகிலேயே சிலகாலத்துக்கு இருந்துவரும். தாயும் மிகக் கவனமாக அதைப் பாதுகாத்துக்கொள்ளும். பாலூட்டி பிராணிகள் அனைத்துக்குமே வெதுவெதுப்பான இரத்த ஓட்டம் உண்டு. என்றாலும் குளிரிலிருந்து தன்னைப் பாதுகாத் துக்கொள்ளும் வகையில் திமிங்கிலத்திற்கு மயிர் அடர்ந்த தோல் அமைப்பு இல்லை. ஆனால் மேல் தோலுக்கடியில் திசுக்களாலான எண்ணெய் (கொழுப்பு) நிரம்பிய ஒரு படிவம் உண்டு. இது வெட்பத்தைத் தக்கவைத்துக்கொள்வதுடன் மிருது வான மயிர்ப்படிவம் போன்றும் உதவுகின்றது.

மீன்கள் போலன்றி தமிங்கிலம் வேறு விதமாக சுவாசிக்கின்றது. மீனுக்குள்ளது போல் திமிங்கிலத்துக்கு செவுள் இல்லை. அதற்கு சுவாசப் பைகள் உண்டு. திமிங்கிலத்தின் தலைகளில் இரண்டு சுவாசத் துவாரங்கள் உண்டு. இதன் மூலம் காற்றை இழுத்துச் சுவாசிக்கின்றது. நீருக்குள் போகும்போது இந்தத் துவாரங்கள் சவ்வினால் மூடிக்கொண்டுவிடும். ஒவ்வோர் ஐந்து அல்லது பத்து நிமிடங்களில் மேலே நீர்மட்டத்துக்கு வந்து சுவாசத் துவாரங்களைத் திறந்து ஏற்கனவே உள்வாங்கிய காற்றை வெளியில் ஊதிவிடும். அதையே திமிங்கிலம் இருக்கும் இடங்களில் நீர் மேல்நோக்கி பாய்ச்சப்படுவதைக் காண்கின்றோம். காற்றை ஊதியபின் மீண்டும் உள்வாங்கிக் கொண்டு நீருக்குள் போய்விடும்.

# புதன் பொய்கை



## கிரிக்கெட் விளையாட்டு முதலில்...

இன்று உலக நாடுகள் அனைத்தும் ஆர்வத்துடன் பங்குபெறும் கிரிக்கெட் விளையாட்டு 1550ஆம் ஆண்டு இங்கிலாந்திலேயே முதன் முதலில் அறிமுகமானது. ஆயினும் அதிகார பூர்வமாக கிரிக்கெட் விளையாட்டு 1700 ஆம் ஆண்டில் தான் விளையாட ஆரம்பிக்கப்பட்டது. கிளாப் ஹாமன் என்னும் இடத்தில் இப்போட்டி இடம்பெற்றது. இது லண்டனில் உள்ளதொரு பகுதியாகும். 1744ஆம் ஆண்டிலேயே கிரிக்கெட் போட்டிக்கான விதிமுறைகள் வகுக்கப்பட்டன. வரலாற்றில் பதிவாகியுள்ள முதல் கிரிக்கெட்போட்டி என்ற வகையில் இங்கிலாந்துக்கும் கென்ட் மாநில அணிக்குமிடையே 1744ஆம் ஆண்டில் இடம்பெற்ற கிரிக்கெட் போட்டியைக் குறிப்பிட இயலும்.

முதலில் இரண்டு ஸ்டம்புகளுடன் ஆடப்பட்ட இவ் விளையாட்டு 1775ஆம் ஆண்டு முதல் மூன்று ஸ்டாம்புகளுடன் ஆடப்பட ஆரம்பிக்கப்பட்டது. 1771ஆம் ஆண்டு முதல் கிரிக்கெட் மட்டைகளின் அகலம், உயரம் வரையறுக்கப்பட்டன. Over Arm Bowling முறை (தோளுக்கு மேலே கையை உயர்த்தி பந்தெறிவது) 1864 ஆம் ஆண்டு முதல் புழக்கத்துக்குக் கொண்டு வரப்பட்டது. புகழ்பெற்ற M.C.C (Marylebone Cricker Club) என்ற கிரிக்கெட் மைதானம் 1787ஆம் ஆண்டு லண்டனில் அமைக்கப்பட்டது.

இன்று கிரிக்கெட் விளையாட்டு உலகின் மிகப் பிரபல்யம் பெற்றதொரு விளையாட்டாகத் திகழ்ந்ததாலும் இது வரை ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளில் இது ஓர் அங்கமாக சேர்த்துக்கொள்ளப்பட்டதில்லை.



# பாலில் என்ன இருக்கிறது?

நாம் அருந்தும் உணவுகளில் மிகவும் பக்குவமான ஏறத்தாழ பூரண உணவாக இருப்பது பாலாகும். பாலில் இருந்து கிடைக்கும் பொருள் அனைத்துமே நம் உடலுக்குத் தேவைப்படுபவையாம். பாலில் உள்ள புரதமானது உடலின் தசைகளைக் கட்டியெழுப்பவும் சீரமைக்கவும் தேவைப்படுகின்றன. பாலில் காணப்படும் இன்னொரு முக்கிய பொருள் கொழுப்பு. உடலுக்குச் சக்தியைக் கொடுக்கும் உணவு இது.

பாலில் வெல்லமும் உண்டு. இதுவும் சக்தியைக் கொடுக்கும் கார்போஹைதரேட் ஆகும். பாலில் காணப்படும் 'லெக்ரோஸ்' எனப்படும் வெல்லமானது கரும்பில் காணப்படுவதைவிட இனிப்புத் தன்மை குறைவாகவே கொண்டுள்ளது. ஆனால் நம் உடலானது ஏனைய வகை வெல்லப் பொருள்களைவிட லெக்ரோஸை மிக எளிதாகப் பயன்படுத்திக் கொள்கின்றது.

முக்கியமான கனிப்பொருள்களையும் (Minerels) பால் எமக்குத் தருகின்றது. எலும்புகளைக் கட்டியெழுப்பவும் இரத்தத்தை உருவாக்கவும் இந்தக் கனிப்பொருள்கள் தேவைப்படுகின்றன. பாலில் அதிகமாக கல்சியமும் பாஸ்பரசும் காணப்படுகின்றன. வேறு எந்த உணவையும் விட பாலில் கல்சியம் அதிகமாகக் காணப்படுவதாகக் கருதப்படுகின்றது. மேலும் இரும்பு, செம்பு, மக்னீஸியம், சோடியம், பொட்டாசியம், குளோரின், அயோடின், கோபால்ட் மற்றும் சிங்க் முதலிய கனிப்பொருள்களும் காணப்படுகின்றன. இவைதவிர பலவித (விட்டமின்) உயிர்ச்சத்துக்களைப் பால் தருகின்றது. $B_2$, A, $B_1$ போன்ற உயிர்ச்சத்துக்கள் பாலில் நிறையவும் காணப்படுகின்றன. C மற்றும் D உயிர்ச்சத்துக்களும் உண்டு. பாலில் தண்ணீர் உண்டு என்பது தெரிந்த விடயமே. ஒவ்வொரு லீற்றர் பாலிலும் 110 கிராம் உணவுத் திடப்பொருள் துணிக்கைகள் உண்டு என்பது ஆச்சரியமான விடயம்.





# ஓம்: அதன் வடிவம்

அடிப்படைக் குரல் ஒலிகள், மண்ணிலோ ஏதாவது ஒரு திரவத்திலோ அதிர்வடையச் செய்யும்போது அவை சில அமைப்புகளை உண்டாக்கும். இந்த அமைப்பு இயல் அலையியில் (Cymatics) எனப்படும்.

இதனைக் கண்டு உணர்த்தியவர் சுவிஸ்நாட்டு அறிஞர் டாக்டர் ஹான்ஸ் ஜென்னி (1904-1972) ஒலியின் ஒவ்வோர் அதிர்வும் ஒரு தனித்த அமைப்புடையது. இயற்கை மூலம் இவை திரும்பத் திரும்ப நிகழ்கின்றன. படைப்பின் அடிப்படை ஒலி ஓம் ஆகும். இப்பிரபஞ்சத்தில் எல்லாப் பொருளும் சக்தி அதிர்வால் ஆனவை. ஒவ்வொரு பொருளும் தனக்கென்று தனித்த அதிர் வெண்ணில் அதிர்கிறது. அதிரும் சக்தியைஒளியாகக் காணலாம்.

இது மனிதர்களையும் உள்ளடக்கியது. நாம் எல்லோரும் அதிரும் ஒளிச்சக்தியே பிரபஞ்சத்திலும் பூமியிலும் சில புள்ளிகள் குவிகிறது. இப்புள்ளிகளை அதிர் புள்ளிகள் (Vortex) என்பர்.

ஹான்ஸ்ஜென்னி ஓம்கார ஒலியை மணலில் அதிரச் செய்தார். அவ்வாறு செய்தபோது ஸ்ரீசக்கர வடிவத்தில் படம் கிடைத்தது! எனவே ஓம் என்ற பிரணவ ஒலியின் வரி வடிவம் (தூலவடிவம்) ஸ்ரீசக்கரம்.

ஆச்சரியமாக இல்லை? நமது ஆன்மீகம் எவ்வளவு அறிவியல் தன்மை கொண்டது என்பது இதன் மூலம் விளங்குகிறது அல்லவா?

(நன்றி: ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




## உதயனின் விசேட ஆசிரியர் குழாமின் தரம் 5 மாணவர்களுக்கான புலமைப்பரிசில் இலகுவழிப் பயிற்சிப் பரீட்சை

01

கீழே தரப்பட்டுள்ள உருவில் எல்லா நிரைகளிலும், நிரல்களிலும் 1,2,3,4 எனும் நான்கு இலக்கங்களும் இருத்தல்வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| △ | 2 | ○ | 4 |
| 2 | 3 | 4 | 1 |
| 4 | △ | 2 | 3 |
| 3 | 4 | △ | 2 |

01. △ இற்குப் பொருத்தமான எண் யாது?
 1) 1
 2) 3
 3) 4

02. ○ இற்குப் பொருத்தமான எண் யாது?
 1) 1
 2) 3
 3) 4

சொற்களை ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியம் அமைக்க பொருத்தமான எழுத்துக்களைக் கொண்ட விடைகளைத் தெரிவுசெய்க.

03.

| A | B | C | D | E |
|---|---|---|---|---|
| ஆசிரியர் | வந்தார் | வகுப்பறைக்கு | பாட | கணித |


1) A,B,C,D,E 2) E,A,D,B,C 3) E,D,A,C,B


04.


| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
|---|---|---|---|---|---|
| வீட்டு | வாசல் | உள்ளது | வடக்கு | பொன்னனின் | நோக்கி |

1) 5,1,2,4,6,3 2) 4,6,3,1,2,5 3) 5,4,1,6,2,3

05. நீண்ட நேரத்திற்குப் பின் நிமிடமுள், மணிமுள் செங்கோணவடிவில் நேரத்தைக் காட்டவுள்ள கடிகாரத்தைத் தெரிவுசெய்க.

1) 


2) 


3) 


பின்வரும் தகவல்களைக்கொண்டு 6ஆம், 7ஆம் வினாக்களுக்கு விடை தருக.

| | |
|---|---|
| பேனா | 1 |
| பென்சில் | 1 |
| விலை | ரு.17.00 |

| | |
|---|---|
| பேனா | 3 |
| பென்சில் | 2 |
| விலை | ரு.47.00 |

06. பேனா ஒன்றின் விலை யாது?
 1) ரு10.00 2) ரு12.00
 3) ரு13.00 4) ரு4.00

07. பென்சில் ஒன்றின் விலை யாது?
 1) ரு10.00 2) ரு12.00
 3) ரு13.00 4) ரு4.00

குறித்த மாதம் ஒன்றின் நாட்காட்டியில் இருந்து பின்வரும் தகவல்கள் பெறப் பட்டுள்ளன.

| 05 | 13 | 21 | 29 |
|---|---|---|---|
| திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் |

08. இதே வருடத்தில் மாசிமாத நாட்காட்டியின் வெற்றிடங்களைப் பூர்த்திசெய்ய பொருத்தமானவற்றைத் தெரிவுசெய்க.

| 01 | 09 | ..... | ..... |
|---|---|---|---|
| ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் |

1) 16, 23 2) 17, 24
3) 17, 25 4) 16, 24

09. மருத்துவ பயனற்ற வித்து எது?
 1) வேம்பு. 2) மா. 3) [illegible]

10. வித்துமுளைத்தலுக்கு அவசியமற்ற காரணி எது?
 1) ஒளி. 2) நீர். 3) வளி.

11. புளிப்புச்சுவையான பழங்களில் அதிகளவில் காணப்படும் உயிர்ச்சத்து எது?
 1) உயிர்ச்சத்து A 2) உயிர்ச்சத்து B 3) உயிர்ச்சத்து C

கிலோமீற்றர் அளவிடையில் அமைந்த நகரங்களுக்கிடையிலான தூர அட்டவணை கீழே தரப்பட்டுள்ளது. அதனைப் பயன்படுத்தி அதன்கீழுள்ள வினாக்களுக்கு விடையளிக்க.

| | | | | | வவுனியா |
|---|---|---|---|---|---|
| அனுராதபுரம் | | | | | 45 |
| புத்தளம் | | | | 70 | D |
| சிலாபம் | | | 65 | C | G |
| நீர்கொழும்பு | | 40 | B | F | I |
| கொழும்பு | 35 | A | E | H | J |

12. கொழும்பில் இருந்து சிலாபத்திற்கான தூரம் ..............

13. நீர்கொழும்பில் இருந்து புத்தளத்திற்கான தூரம் ..............

14. சிலாபத்தில் இருந்து அனுராதபுரத்திற்கான தூரம் ..............

15. புத்தளத்தில் இருந்து வவுனியாவிற்கான தூரம் ..............

16. கொழும்பில் இருந்து புத்தளத்திற்கான தூரம் ..............

17. நீர்கொழும்பில் இருந்து அனுராதபுரத்திற்கான தூரம் ..............

18. சிலாபத்தில் இருந்து வவுனியாவிற்கான தூரம் ..............

19. கொழும்பில் இருந்து அனுராதபுரத்திற்கான தூரம் ..............

கீழே தரப்பட்டுள்ள பந்தியை வாசிக்கவும்.

மண்சரிவு காரணமாக புகையிரதப் பாதைகளும் பாதிக்கப்பட்டிருப்பதால், இரத்தினபுரிஊடாகச்செல்லும் புகையிரதச் சேவைகள் யாவும் ரத்துச் செய்யப்பட்டிருப்பதாக புகையிரதநிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார். மண்சரிவினால் பாதிக்கப்பட்டு, இடம்பெயர்ந்துள்ள குடும்பங்களுக்கு நிவாரணஉதவிகள் வழங்குவதில் தொண்டர்ஸ்தாபனங்கள் ஈடுபட்டு வருகின்றன.

மிகச்சரியான விடையைத் தெரிவுசெய்து அதன்கீழ்க் கீறிடுக.

20. இப்பந்தியின்படி மண்சரிவு ஏற்பட்டதால் இடம்பெற்ற பாதிப்பு,
 1) வீதிப்போக்குவரத்து தடைப்பட்டது.
 2) மின்விநியோகம் தடைப்பட்டது.
 3) புகையிரதச்சேவைகள் ரத்துச்செய்யப்பட்டன.
 4) நிவாரண உதவிகள் வழங்கப்பட்டன.

21. இடம்பெயர்ந்துள்ள குடும்பங்களுக்கு வழங்கப்படும் நிவாரணஉதவிகள் எவையாக இருக்கும்?
 1) உலர் உணவுகள், நிரந்தர இருப்பிடம், பட்டுப்புடவைகள்.
 2) உலர் உணவுகள், தற்காலிக இருப்பிடம், மருத்துவ உதவிகள்.
 3) கடன்பணம், கல்விச்சேவை, பொழுதுபோக்குகள்.
 4) பொழுதுபோக்குகள், தொழில்வாய்ப்பு, மருத்துவ உதவி.

22. இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு நிவாரண உதவிகள் வழங்குவோர்,
 1) புகையிரத நிலையப் பொறுப்பதிகாரி.
 2) தொண்டர் ஸ்தாபனங்கள்.
 3) மின்சார சபையினர்.
 4) பெருந்தெருக்கள் திணைக்களம்.

23. வித்து ஒன்று முளைக்கும்போது முதலில் தோன்றுவது எது?
 1) வேர்மயிர். 2) தண்டு. 3) இலை.

பூரணமாக விளக்கமடையும் விதத்தில் வெற்றிடங்களுக்குப் பொருத்தமான சொற்களை தரப்பட்டுள்ள மூன்று சொற்களில் இருந்து தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.

அன்புள்ள நண்பன் கமலனுக்கு,

நீர் கடந்த ஆண்டில் நடைபெற்ற தரம்-05 புலமைப்பரிசில் 1) .......................... சித்தியடைந்ததை உமது 2) .................... மூலம் அறிந்து மிகவும் மகிழ்ச்சியடைந்தேன். நீர் கடந்தவருடம் செய்த 3) ..................... தான் உமது வெற்றிக்குக் காரணம் என்பதை நான் அறிவேன். தொடர்ந்து நன்றாகக் கல்விகற்று இன்னும் பல பரீட்சைகளில் தொடர்ந்து 4) .......................... அடைந்து, மிக உயர்ந்தநிலையை அடையவேண்டும் என மனதார 5) ..........................

24. முதலாவது வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்,
 1) போட்டியில். 2) பாடத்தில். 3) பரீட்சையில்.

25. இரண்டாவது வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்,
 1) வானொலி. 2) கடிதம். 3) பத்திரிகை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**26.** மூன்றாவது வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்,
1) செயல். 2) படிப்பு. 3) முயற்சி.

**27.** நான்காவது வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்,
1) சித்தி. 2) போட்டி. 3) எழுதி.


**28.** ஐந்தாவது வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்,
1) வாழ்த்துகின்றேன். 2) தூற்றுகின்றேன்.
3) சொல்லுகின்றேன்.

கீழுள்ள வரைபடங்களையும் அவற்றுக்கான விளக்கத்தினையும் அவதானிக்கவும்.





வினாவிலுள்ள விடயங்களுக்குப் பொருத்தமான வரைபடத்தைத் தெரிவு செய்து அதன்கீழ்க் கோடிக.

**29.** வாகனங்கள், கார்கள், பஸ்கள்.




**30.** மரங்கள், கிளைகள், கனிகள்.




**31.** மண்ணில் புற்று அமைக்கத்தெரியாத பிராணி எது?
1) பாம்பு. 2) எறும்பு. 3) கறையான்.

சில குறியீடுகளும் அவற்றைக் குறிக்கும் பெறுமானங்களும் தரப்பட்டுள்ளன.

□ □ = 6 △ □ = 7 △ ○ = 9 ○ ✕ = 6


மேலுள்ள குறியீட்டுப் பெறுமானங்களின்படி கீழுள்ள குறியீடுகளுக்குரிய பெறுமானத்தைத் தெரிவுசெய்க.

**32.** △△ 1) 10 2) 8 3) 2

**33.** ○○ 1) 10 2) 8 3) 2

**34.** ✕✕ 1) 10 2) 8 3) 2

**35.** தரப்பட்டுள்ள A,B,C,D எனும் கடிகாரமுகங்களின் கீழே குறிப்பிடப் பட்டுள்ள நேரங்களை மணிமுள், நிமிடமுள் என்பவற்றால் குறித்துக் காட்டுக.



03.15 06.30 09.45 11.55

கீழே தரப்பட்டுள்ள தகவல்களை நன்கு அவதானித்து வினாக்களுக்கு விடைகளைத் தெரிவுசெய்க.

| | |
|---|---|
| தகவல் - A : | மு.ப 05.00 இலிருந்து பி.ப 01.00 வரை |
| தகவல் - B : | மு.ப 03.00 இலிருந்து பி.ப 11.00 வரை |
| தகவல் - C : | மு.ப 11.00 இலிருந்து பி.ப 01.00 வரை |

**36.** அதிக காலத்தைக் குறிக்கும் தகவல் எது?
1) A 2) B 3) C

**37.** குறைந்த காலத்தைக் குறிக்கும் தகவல் எது?
1) A 2) B 3) C

| | |
|---|---|
| தகவல் - A : | ரூபா 100 இன் 3/4 பங்கு |
| தகவல் - B : | ரூபா 200 இன் 1/4 பங்கு |
| தகவல் - C : | ரூபா 150 இன் 5/6 பங்கு |

**38.** அதிக பணத்தொகையைக் குறிக்கும் தகவல் எது?
1) A 2) B 3) C

**39.** குறைந்த பணத்தொகையைக் குறிக்கும் தகவல் எது?
1) A 2) B 3) C

**40.** 0.75 எனும் தசம எண்ணுடன் பொருந்தும் வகையில் அமைந்த தகவல் எது?
1) A 2) B 3) C

# வாசகர் திருமுகம்

## வறுமையில் உள்ளோர் பிள்ளைகளின் கல்விக்கு யார் பொறுப்பேற்பது?

1956க்கு முன்னர் உயர் கல்வி கற்றவர்கள் வாழ்க்கை வசதிகளைப் பெற்ற விவேகமுள்ள மிகச் சிலரே. அதனால் தேர்வுகளில் பலர் சித்தி பெற்றனர். திறமைச் சித்தி பெறாதவர்களும் உடனுக்குடன் வேலை வாய்ப்பு பெறக் கூடியதாகவிருந்தது.

இன்று நிலைமை வேறு. கிராமப்புறப் பிள்ளைகள் எல்லோரும் பள்ளிக்குச் செல்கிறார்கள். இவர்களில் பலர் வாழ்க்கை வசதியற்றவர்கள். வீட்டுச் சூழல், சுத்தம், சுகாதாரம், சத்துணவு, கல்விச்சூழல், ஒழுங்கற்ற - ஒழுக்கமற்ற வாழ்க்கை முறை, பொறுப்பற்ற பெற்றார், குடும்பச் சண்டை, தலைவனில்லாத குடிகள், சட்டம் - ஒழுங்கு நிலை நாட்டப்பட முடியாத போர்ச்சூழல் இவைகளால் பாதிக் கப்பட்டவர்கள்.

யாழ்.மாவட்டத்திலே பள்ளிக்குச் செல்லும் மாணவர்களில் பெரும்பாலானவர் இவ்வகையைச் சேர்ந்தவர்களே. பள்ளிகள் பரவலாக இருப்பதால் இந்த மாணவர்கள் படிக்கப் போகிறார்கள். அவர்கள் எழுத வாசிக்கப் பயின்றாலே போதும். அநேகர் ஆரம்பக் கல்வியுடன் நின்று விடுவர். இந்த நிலையில் மேற்படி மாணவரின் கல்வித் தரத்தை உயர்த்த பள்ளி ஆசிரியர்களால் முடியுமா? பெற்றோரின் ஒத்துழைப்பு இன்றி மாணவர் கல்வி விருத்தியடையாது.

நாட்டிலே பாலிய திருமணங்கள், கட்டுப்பாடற்ற மகப்பேறு, முயற்சிக்குப் பதிலாக பிறர் தயவில் நிவாரணம், களவு, கொள்ளை முதலிய தீய வழிகளில் வாழத்தலைப்படுதல். இத்தகைய சூழலில் பிள்ளைகள் கற்று முன்னேற முடியாது. மேல் மட்டத்திலே உள்ளவருக்கு, அரச அதிகாரிகளுக்கு இது புரியாது. அவர்கள் ஏதேதோ திட்டமிடுகிறார்களாம். கட்டடங்கள், தளபாடங்கள், நவீன கற்பித்தல் கருவிகள், அதிபர், ஆசிரிய தரம் உயர்வு, சம்பள உயர்வு இத்தகைய செயற்பாடுகளை சற்று ஆராய்ந்து பார்க்கில் மேல் மட்டத்திலே உள்ள சிலரை மேலும் மேல் மட்டத்துக்கு இட்டுச் செல்ல உதவு கின்றன. பத்திரிகைகளுக்கு வழங்கப்பட்டு அவற்றில் வெளிவரும் புள்ளிவிவரங்கள் முழுக்க முழுக்க இந்த மேல் மட்டத்தில் உள்ளவரைப் பற்றியனவே.

இந்த நாட்டிலே வறுமைக் கோட்டுக்குக் கீழ்ப்பட்டவர்கள் என்று ஒரு பகுதியினர் ஒதுக்கப் பெற்றுள்ளனர். இவர்கள் யார், சொத்திகளா, குருடர்களா, மன நோயாளர்களா, வயோதிபரா, தீராத வியாதி உடையோரா, அரச அதிகாரிகள் நாட்டிலே பொய்யருக்கு மதிப்புக் கொடுக்கிறார்கள். இத்தகைய குடும்பங்களின் பிள்ளைகள் கல்வியிலோ வேறு வகையிலோ முன்னேறுவது எங்ஙனம்?

-க.மகேசன்
(ஓய்வுபெற்றகல்வி நிர்வாக அதிகாரி)
யாழ்ப்பாணம்.


# ஏசியன் கல்வி நிலையம்
## புத்தூர்ச்சந்தி, மீசாலை
## பாராட்டி வாழ்த்துகின்றோம்

கடந்த வருடம் 2007 இல் நடைபெற்ற க.பொ.த. சா/தரப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களான

| | |
|---|---|
| கனகரத்தினம் சோபிகா | -10A |
| இராஜலிங்கம் மாதங்கி | -10A |
| நித்தியானந்தசோதி டியானி | -9A,B |

| | | | |
|---|---|---|---|
| 01. சி.பிரசங்கீதா | -7A,2B,C | 08. த.குகதீசன் | -7A,2B,S |
| 02. ப.நிகிந்தன் | -6A,3B,S | 09. ந.தயாநிதி | -6A,3B,S |
| 03. க.மனோசா | -6A,2B,C,S | 10. ம.நிக்ஜா | -5A,4B,S |
| 04. த.வைஷ்ணவி | -5A,3B,C | 11. சி.நிறோஜன் | -5A,3B,C |
| 05. த.தர்மிலன் | -5A,2B,2C | 12. க.சகீலா | -5A,B,2C,2S |
| 06. ப.தர்ஜித்திரா | -4A,3B,3C | 13. பா.பவித்திரா | -4A,4B,C,S |
| 07. சி.மிதிலா | -4A,B,2C,2S | 14. சு.சுபநீதன் | -4A,B,2C,2S |

த.தனுசா, சி.செந்தூரன், வி.பிரியா, சி.ஸ்ரீரேகா, ஸ்ரீ.பிரியங்கா, போ.மதுநிகா, சி.சிறிசுதன், ப.பரலோகராணி, சி.சுரேகா, ச.லிந்துஷா, க.நீதிசன், பு.பிரியங்கன், பு.ரஜிந்தா, அ.ஜீவிகா, கு.நிதர்சினி, மா.டிலக்சனா, க.கனோசா, சி.சுதர்சன், சி.அமந்தன், மு.கலாவினோதன், கு.குணாவன், ச.சுகிர்தன், ப.லதுசாந், க.பார்க்கவி, க.அமல்ராஜ், இ.ஜெனதன், கு.ஜெசிதா, சி.நிஷாந்தினி, ம.ரஜனி ஆகிய மாணவர்களைப் பாராட்டுவதோடு,
* 2006ஆம் ஆண்டு க.பொ.த.சா/தர பரீட்சையில் நிலையத்தில் கல்வி கற்ற அனைத்து O/L மாணவர்களும் சித்தியடைந்தனர் என்பதை தெரிவித்து அவர்களையும் பாராட்டுகின்றோம்.

வாழ்த்துவோர்: நிர்வாகி, ஆசிரியர்கள், மாணவர்கள்.

(72929)



# பாராட்டி வாழ்த்துகின்றோம்
## 2007 க.பொ.த.(சா/த) பெறுபேறு
## யா/ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்
## ஆவரங்கால், புத்தூர்

| | |
|---|---|
| 01. பாலசுப்பிரமணியம் அங்குசன் | -10A |
| 02. மார்க்கண்டு ரேகாதீபன் | -9A,C |
| 03. செல்வநாயகம் அஜனன் | -6A, 2B,C,S |
| 04. சிந்துஜா ஜெயபாலசர்மா | -6A, 4C |
| 05. திவிகா செல்வரட்ணம் | -5A, 5B |
| 06. சௌமியா ராதாகிருஷ்ணமூர்த்தி | -5A, 2B, 3C |
| 07. எழில்வதனி கனகசிங்கம் | -5A, 2B,C,2S |
| 08. அஜந்தினா தவக்குகன் | -5A,2B,2C |
| 09. கஜனி இராசதுரை | -4A, 4B,2S |
| 10. ஆர்த்திகா அமிர்தலிங்கம் | -4A, 5C,S |
| 11. அபர்ணா குழந்தைவேலு | -4A, 4C,2S |
| 12. தனுசியா பத்மநாதன் | -4A, 2B,3C |
| 13. சிந்துஜா குகராசா | -4A, B,4C |
| 14. பானுஜா தர்மகுலசிங்கம் | -4A, 3C, 2S |
| 15. வினோஜா ராஜநாயகம் | -3A, 2B,2C,3S |
| 16. கஜனி அருந்திரகுமார் | -3A, 3B,2C,S |
| 17. கீர்த்திகா தெய்வேந்திரம் | -3A, B,3C,2S |
| 18. கிரிராஜ் தயாளநிதி | -2A, 2B,2C,4S |
| 19. பானுஜா ராஜலிங்கம் | -2A, 2B,C,5S |
| 20. லக்சனா அருளேந்திரம் | -2A, 4C, 3S |
| 21. ஸ்ரீகரன் பத்மகரன் | -A, 7B, 2C |
| 22. பாலசுப்பிரமணியம் லகுபரன் | -A, 3B,3C,3S |
| 23. தர்மலிங்கம் நிசாந்தன் | -A, B,5C,2S |
| 24. யசீதா ஆனந்தராசா | -A, B,4C,3S |
| 25. ரமிலா உதயகுமார் | -A, B, 3C,3S |

மேற்படி அதிவிசேட சித்திபெற்ற மாணவர்களையும் உயர்தர வகுப்பிற்கு தகுதி பெற்ற ஏனைய மாணவர்களையும் வாழ்த்துவதோடு, அவர்களுக்கு வழிகாட்டிய அதிபர், ஆசிரியர்களையும் பாராட்டுகின்றோம்.

பா.அ.சங்கம், பழைய மாணவர் சங்கம்,
யா/ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்.

(72931)

விளம்பர அனுசரணை: க.செல்வநாயகம்
செல்வா சைக்கிள் அன்ட் ஹாட்வெயார், பருத்தித்துறை வீதி, ஆவரங்கால்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 24 ★ 02 ★ 1988



மறைவு 22 ★ 03 ★ 2007

### அமரர் தர்மரத்தினம் உதயசங்கர்

நீங்கள் மறைந்து ஓராண்டு சென்றாலும்
உம் நினைவிலிருந்து எம்மால் மீள முடியவில்லையே!
உமது ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பார்த்திபன் (கோபி-ஆபிரிக்கா),
ராசசேகரன் (கரன்- டுபாய்),
கிரிதரன் (கிரி),
எழிலரசி (எழில்).

தர்மரத்தினம் இராசமணி,
குடமியன்,
வரணி. (72539)

## நன்றி நவிலலும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்



மலர்வு 28 . 05 . 1933

மறைவு 11 . 03 . 2008

(552199)

### திருமதி இரத்தினவடிவேல் சிதம்பரநாயகி

(வல்வெட்டித்துறை)
அந்தியேட்டி: 10.04.2008

11.03.2008 அன்று சிவபதமெய்திய எமது அன்புத் தெய்வத்தின் இறுதிச் சடங்கில் கலந்து கொண்ட உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் தந்தி, தொலைபேசி மூலம் அனுதாபச் செய்திகள் அனுப்பி ஆறுதல் தெரிவித்தோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

10.04.2008 இல் அன்னாரின் ஆத்மாசாந்தியடைய இல்லத்தில் நடைபெறும் கிரியைகளில் பங்குபற்றுவதுடன் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சில்லாலை ஒழுங்கை,
வேம்படி, வல்வெட்டித்துறை.

பிள்ளைகள் மற்றும் குடும்பத்தினர்.

## நான்காம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு 07 05 1950



உதிர்வு 25 03 2004

### திருமதி வைகுந்தராஜா தையல்நாயகி

திதி: சதுர்த்தி (09.04.2008)

வண்ணக் கதிர்பரப்பும்
வானத்துச் சூரியன் போல்
காரிருள் நீக்கி எம்மை
காலமெல்லாம் வாழவைத்த தாயே.....!
மாலை வேளையிலே
மறைந்திட்ட சூரியன் போல்
மரணத்தில் எமைவிட்டு
மறைந்தே விட்டீரம்மா...!
ஆதவன் உதித்து விட்டான்
அடுத்த நாளேயம்மா- ஆனால்
ஆறெட்டு மாதமாச்சு
அம்மா உம்மை எதிர்பார்த்து.....!

(72921)

சிவன் கோயில் வீதி,
சாவகச்சேரி.

கணவர், பிள்ளைகள், மருமக்கள்.




யாழ்ப்பாணம், ஏப்.9

மூளாய் வதிரன்புலோ ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய வருடாந்த பெருந்திருவிழா இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து உற்சவங்கள் நடைபெறும்.

எதிர்வரும் 19ஆம் திகதி தேர்த்திருவிழாவும் 20ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (202)

* * *

வடமராட்சி, ஏப்.9

மேலைப் புலோலி வாணர் குடியிருப்பு சொக்கன் கலட்டி ஸ்ரீமுத்துமாரி அம்மன் கோயில் வருடாந்த பொங்கல் உற்சவம் நேற்று செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகியது.

இன்று புதன்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு விசேட பூசை இடம்பெற்று பிற்பகல் 12.30 மணிக்கு நிறைவுபெறும். (202-236)

* * *

வடமராட்சி, ஏப்.9

வதிரி தேவரையாளி கண்ணகை அம்மன் கோயில் வருடாந்த அலங்கார உற்சவம் கடந்த புதன்கிழமை ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

நாளை மறுதினம் வெள்ளிக்கிழமையுடன் அலங்கார உற்சவம் நிறைவுறும். (202-236)

* * *

நாவற்குழி, ஏப்.9

கைதடி ஸ்ரீ சச்சிதானந்தா ஆச்சிரமத்திலுள்ள மாதாஜி லிங்கேஸ்வரர் ஆலயத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை தொடக்கம் பன்னிரு திருமுறைப்பாராயணம் நடைபெற்று வருகின்றது.

இப்பன்னிரு திருமுறைப்பாராயணம் எதிர்வரும் மே மாதம் 6ஆம் திகதி வரை இடம்பெற இருக்கின்றது. பூர்த்தி விழாவன்று மகாகும்பாபிஷேக விழாவும் நடைபெறும். (202-288)


### இறைச்சிக்கோழி விற்பனை

புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்.
நல்லூர் பாம் சென்ரர்
19, முருகேசர் லேன், நல்லூர். (72220)

### உடன் தேவை

ஊர்க்குஞ்சுகள், ஊர்ச்சேவல்கள் உடன் தேவை.
தாசன் பாம்,
158/4, கோயில் வீதி, யாழ்ப்பாணம். (சி/552225)

### விற்பனைக்கு

மிக நல்லநிலையில் ஒரு கைப்பாவனையில் உள்ள வியாபார பாவனைக்கும் அலுவலக பாவனைக்கும் மதகுருமாரும் பயன்படுத்தக்கூடிய ஒஸ்ரின் 1000 மொடல் கார் விற்பனைக்கு உண்டு.
26, சீனிவாசகம் வீதி,
கொட்டடி, யாழ்ப்பாணம்.
(கொம்பியூட்டர் பயிற்சிநிலையம் முன்பாக). (72899)

### மணமகள் தேவை

யாழ் இந்து கௌரவ குடும்பம், 1975ஆம் ஆண்டு பிறந்த, உயரம் 6அடி, பூரம் 4ஆம் பாதம், சிங்கராசி, கிரகபாவம் 24 உடையலண்டன் P.R. கொம்பியூட்டர் எஞ்சினியராகக் கடமையாற்றும் மணமகனுக்கு லண்டனில் அல்லது யாழ்ப்பாணத்தில் தகுந்த மணமகளைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றார்கள்.
தொடர்பு: க.குழந்தைவடிவேல்
சுன்னாகம் கிழக்கு, சுன்னாகம்.
T.P.:060 2217015. (72901)

### கோழிக்குஞ்சு விநியோகம்

BAHIRA புறொயிலர் குஞ்சுகள் இன்று (09.04.2008) விநியோகிக்கப்படும். பதிவுகளை மேற்கொள்ளவும்.

- ★ நாஜின் - நவாலி வீதி, ஆனைக்கோட்டை
- ★ மதுரா - ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
- ★ திருமகள் களஞ்சியம் - சிவலிங்கப் புளியடி
- ★ கோல்டன் பாம் - பருத்தித்துறை
- ★ P.ரவி - சாவகச்சேரி
- ★ சிற்றி பாம் றேடேர்ஸ் - கல்வியங்காடு.

(72884)

### ALLIANCE FRANCAISE DE JAFFNA

83, Palaly Road,
Kantharmadam, Jaffna.
Phone: 021 2228093
E-mail: alliancejaffna@yahoo.com

COURS DE FRANCAIS-
பிரெஞ்சு மொழி வகுப்புகள்

ஆரம்பம் மிக விரைவில்............
இலங்கையிலுள்ள பிரெஞ்சு தூதரகத்தின் மூலமும், Alliance Francaise De Paris இன் மூலமும் மேற்கொள்ளப்படும். பிரெஞ்சு மொழி வகுப்புகளுக்கு ஆர்வமுள்ள அனைவரும் கற்கலாம்.
வகுப்புகள்: சனி, ஞாயிறு
பதிவுகளை உடன் மேற்கொள்ளவும்.
கட்டணம், ஏனைய விபரங்களை நேரில்/ தொலைபேசியின் ஊடாகப் பெறலாம். (72913)


## நீங்காத நினைவலைகள் 3ஆம் ஆண்டு

மலர்வு 16 . 08 . 1981



உதிர்வு 09 . 04 . 2005

### அமரர் ஞானசேகரம் ஜயந்தன்

எம் இனிய அண்ணாவே!
ஆருயிரே! உயிரினும் மேலான செல்வமே!
உம் வரவை எண்ணி நித்தம் உம் நினைவால்
தவிக்கின்றோம் எம் உயிரே மீண்டும்
நீர் எமக்கு தவழ்ந்து வரக் காத்திருக்கின்றோம்.

ஆவரங்கால் கிழக்கு,
புத்தூர். (72754)

குடும்பத்தினர்.

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 19 ★ 11 ★ 1946



உதிர்வு 02 ★ 04 ★ 2006

### திருமதி செல்வராசா சரஸ்வதி

திதி: பங்குனி சதுர்த்தி (09.04.2008)

அன்பால் அரவணைத்து ஆசை மொழிபகிட்டி
மன்னு புகழ் கீர்த்தியுடன் வாழவைத்த தெய்வமே!
உன் புன்னகைமலர் காணாது எம்மை
தவிக்க விட்டுச் சென்றதேனோ?
இரண்டாண்டுகள் சென்றாலும் உன்
நினைவுகள் எம் மனதோடு வாழுமம்மா.

108/9, கச்சேரி நல்லூர் வீதி,
நல்லூர். (72918)

உங்கள் பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.


ශ්‍රී ලංකා සිමෙන්ති සංස්ථාව
இலங்கை சிமெந்துக் கூட்டுத்தாபனம்
SRI LANKA CEMENT CORPORATION

### ஸ்ரீலங்கா சிமெந்துக் கூட்டுத்தாபனம்
### சிமெந்து உற்பத்தியில் முன்னணி வகிக்கின்றது

யாழ்ப்பாணக் குடாநாட்டில் சிமெந்தினை விற்பனை செய்வதற்காக அனுபவம் வாய்ந்த சிமெந்து விநியோகஸ்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

ஸ்ரீலங்கா சிமெந்துக் கூட்டுத்தாபனம் SLS107 சான்று பெற்ற உயர்தரமான "மகாமரா" (Mahamera) சிமெந்தினை விநியோகிப்பதற்கு உத்தேசித்து இருக்கின்றோம்.

யாழ். குடாநாட்டிலுள்ள வாடிக்கையாளர்களுக்கு தற்போதுள்ள சிமெந்து தட்டுப்பாட்டினை நீக்கி, மகாமரா என்னும் பெயருடன் சிமெந்தினை 2008ஆம் ஆண்டு சித்திரை (April) மாத நடுப்பகுதியில் இருந்து நாட்டிலுள்ள படிப்படியான விலைக்கு ஏற்ப நியாயமான விலையில் வாங்குவதற்கோ/ விற்பனை செய்வதற்கோ உத்தேசித்து இருக்கின்றோம்.

சிமெந்து விற்பனை செய்வதற்கு ஆர்வமுள்ள விநியோகஸ்தர்களை கீழ்க் குறிப்பிடப்பட்ட ஆவணங்களை விளம்பரப்படுத்திய தினத்திலிருந்து ஒரு கிழமைக்குள் விண்ணப்பிக்கும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

1. கம்பனியின் பெயர், விலாசம், வியாபாரப் பதிவு இலக்கம்
2. தொலைபேசி, தொலைநகல், மின்னஞ்சல் தொடர்பு இலக்கங்கள்
3. குறைந்த பட்சம் மாதாந்தம் தேவையான 50 கிலோ கிராம் எடையுள்ள சிமெந்துப் பைகள்.
4. போக்குவரத்து வசதி, களஞ்சிய வசதி
5. 100,000/= ரூபா பெறுமதியான வங்கி உத்தரவாதம்

தலைவர்,
ஸ்ரீலங்கா சிமெந்துக் கூட்டுத்தாபனம்,
103, டபிள்யு.ஏ.டி.ராமநாயக்க மாவத்த, கொழும்பு-02.

தொலைபேசி இலக்கங்கள்: 2440213, 2440212
தொலை நகல் இலக்கம்: 2448866

க.தர்மகுலசிங்கம்,
ஸ்ரீலங்கா சிமெந்துக் கூட்டுத்தாபனம்,
சிரேஷ்ட பாதுகாப்பு உத்தியோகத்தர்,
கே.கே.எஸ்.வீதி, இணுவில், யாழ்ப்பாணம்.

தொலைபேசி இலக்கம்: 021 222 2239
தொலை நகல் இலக்கம்: 021 222 7890

(சி/552218)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# அமைதித் தீர்வின் அவசரத்தை நினைவூட்டும் சர்வதேச சமூகம்

இலங்கை இனப்பிரச்சினை தொடர்பான விவகாரத்தை ஊன்றி அவதானித்து வருபவர்களுக்கு ஒரு உண்மை நன்கு தெரியும். எப்பெப்போதெல்லாம் அமைதி முயற்சிகளுக்கு விடுதலைப் புலிகள் அழைப்பு விடுக்கின்றார்களோ அப்பப்போதெல்லாம் புலிகள் பலவீனமடைந்து விட்டமையாலேயே அத்தகைய அழைப்பை விடுக்கின்றார்கள் என்று தென்னிலங்கை அர்த்தப்படுத்திக் கொள்வது வழமை என்பதுதான் அது.

புலிகள் நொந்து, நொடிந்து போய்விட்டார்கள். அதனால்தான் கெஞ்சிச் சமாளிக்க அமைதிப் பேச்சுக்கு அழைப்பு விடுக்கின்றார்கள் என்று ஓர் அர்த்தத்தையும் விளக்கத்தையும் கற்பித்துக்கொள்ளும் தென்னிலங்கை, புலிகளின் அத்தகைய பலவீன நிலையை வாய்ப்பாகவும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று கருதி தனது தாக்குதல் நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தவும் தவறுவதில்லை. புலிகள் சமாதான முயற்சிகளுக்கு அழைப்பு விடுக்கும் சமயங்களில் எல்லாம் களத்தில் - யுத்த முனையில் - சண்டை தீவிரம் அடைவதின் பின்னணி இதுதான்.

இப்போதும் கூட, இலங்கை அரசுத் தரப்பு புலிகளுடன் தான் செய்துகொண்ட யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை ஒரேயடியாக முறித்து, தீவிர யுத்தத்தில் குதித்தபோதும், யுத்தநிறுத்த ஒப்பந்தத்தைக் கடைப்பிடிக்கவும் அதன் அடிப்படையில் அமைதிப் பேச்சைத் தொடரவும் தாம் இன்னும் தயார் எனப் புலிகள் அறிவித்தமையைக் கூடத் தென்னிலங்கைத் தரப்பு அப்படித்தான் கருதித் தவறாகவே எடைபோட்டுக் கொண்டது.

இராணுவ வலுச்சமநிலையில் தான் மேம்பட்டு உச்சத்தில் நிற்பதாகத் தன்னைக் கருதிக்கொள்ளும் கொழும்பு, மிகவும் பலவீனமான - பின்னடைவான - நிலையில் புலிகள் இருப்பதால்தான் இன்னமும் அமைதி முயற்சிகளுக்கும் யுத்த நிறுத்தத்தைத் தொடர்ந்து கடைப்பிடிக்கவும் தாம் தயார் என்று தொடர்ந்து கூறி வருகின்றனர் என எண்ணிக்கொள்கிறது.

இப்போதும் கூட மடு தேவாலயப் பகுதியைக் கைப்பற்றி ஆக்கிரமிக்கும் எண்ணத்தோடு இலங்கை இராணுவத்தினர் நடத்தும் தீவிரத் தாக்குதல் திட்டத்தைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்று அரசு - புலிகள் அமைதிப் பேச்சுக்கு அனுசரணைப் பணி வகிக்கும் நோர்வேயை விடுதலைப் புலிகளின் அரசியல் பொறுப்பாளர் பா. நடேசன் கடிதம் மூலம் கேட்டிருக்கின்றார்.

விடுதலைப் புலிகளின் இந்த இறைஞ்சலைக் கூட அவர்களின் பலவீனத்தின் வெளிப்பாடாகவே கொழும்பு அர்த்தப்படுத்திக் கொள்ளும் என்பது நிச்சயம்.

மடுப் புனித ஸ்தலப் பிரதேசத்தைப் படைத்தரப்பினரிடம் இழக்கப்போகின்றோம், பறிகொடுக்கப் போகின்றோம் என்ற விசனத்தில் - ஆதங்கத்தில் - வேறு வழியின்றி நோர்வே அனுசரணைத் தரப்பிடமாவது முறையிட்டு, கெஞ்சி, சமாளித்துப்பார்ப்போம் என்ற எண்ணத்தில் புலிகள் செய்யும் முயற்சியாகவே இதைக் கொழும்பு கற்பிதம் செய்து கொள்ளும் என்பதில் சந்தேகம் இல்லை.

இதேசமயம், அமைச்சர் ஜெயராஜின் படுகொலையை ஒட்டி சர்வதேச சமூகத்திடமிருந்து வந்துள்ள கண்டனங்களும் இன்றைய நிலையில் கவனமாக நோக்கப்படவேண்டியவை.

ஐரோப்பிய ஒன்றியம், அமெரிக்கா, கனடா, ஆஸ்திரேலியா, பங்களாதேஷ் போன்ற பல நாடுகள் இப்படுகொலையைக் கண்டித்துள்ளன.

இக்கண்டனத்தை ஒட்டி சர்வதேச சமூகத்தின் நிலைப்பாடு தெளிவாகவும், திடமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருப்பதையும், அதில் இரண்டு முக்கிய விடயங்கள் பொதிந்திருப்பதையும் நாம் கவனிக்க வேண்டும்.

ஒன்று - வழமைபோலல்லாது இம்முறை அமைச்சர் ஜெயராஜின் படுகொலைக்கு தமிழீழ விடுதலைப் புலிகளை நேரடியாகக் குற்றம் சுமத்துவதை சர்வதேச சமூகத்தின் பெரும்பாலான தரப்புகள் தவிர்த்துக் கொண்டுள்ளன.

மற்றது - இந்தப் படுகொலைக் கண்டனச் செய்தியிலேயே இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வுக்கான முயற்சியை விரைந்து முன்னெடுக்கும்படி சர்வதேச சமூகம் வலியுறுத்தி நிற்கின்றது.

அதாவது, இலங்கை இனப்பிரச்சினைக்கு யுத்த வழியில் இராணுவத் தீர்வு காண முயலும் தரப்புக்களின் செயற்பாட்டையும் நேரடியாகச் சொல்லாமல் சொல்லும் விதத்தில் கண்டிக்கின்றது இந்தக் கண்டன அறிக்கைகள் என்பதே உள்ளார்ந்தமாகும்.

அதுமட்டுமல்ல. அத்தகைய யுத்த வெறிப்போக்கே இத்தகைய கொடூரக் கொலைகளுக்கும் நாசங்களுக்கும் அழிவுகளுக்கும் வெற்றிலை வைத்து அழைப்பு விடுத்துள்ளன என்ற உண்மையும் கூட அக்கண்டன அறிக்கைகளுக்குள் தொக்கி நிற்பது அவதானிக்கத்தக்கது.

இதுவெல்லாம், இவ்விவகாரங்களைத் தீர்மானிக்கும் தரப்பு களின் சிந்தனைக்குள் ஏறுமா? ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம்!

# சொந்த லாபத்துக்காக தமிழக மக்களை வஞ்சித்துவிட்டார் முதல்வர் கருணாநிதி

## வைகோ குற்றச்சாட்டு



சென்னை,ஏப்.9

சொந்த லாபத்துக்காக தமிழக மக்களை முதல்வர் கருணாநிதி வஞ்சித்துவிட்டார் என்று ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ குற்றஞ்சாட்டியுள்ளார்.

ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்றக் கோரியும் கர்நாடகத்தில் தமிழர்கள் தாக்கப்பட்டதைக் கண்டித்தும் ம.தி.மு.க. சார்பில் சென்னையில் நேற்றுமுன்தினம் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றும்போது வைகோ கூறியவை வருமாறு:-

மிக முக்கிய காலகட்டத்தில் இந்தப் ஆர்ப்பாட்டத்தை நடத்துகிறோம். வெண் ணெய் திரண்டு வரும்போது பானை உடைந்தது போல் முதல்வர் கருணாநிதியின் அறிவிப்பு உள்ளது.

வெகுநாள்களாக தமிழக மக்களிடையே எழுச்சி இல்லையே என்ற எண்ணம் இருந்த நிலையில், ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டப் பிரச்சினையில் அனைவரும் ஒன்று திரண்டு வந்தனர். ஆனால், தற்போது திடீரென்று கர்நாடகத்தில் தேர்தல் முடியும் வரை ஒகேனக்கல் திட்டத்தை நிறுத்தி வைப்பதாக முதல்வர் கருணாநிதி அறிவித்துள்ளார். எந்த உத்தரவாதத்தின் அடிப்படையில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது?

சட்டப்பேரவையில் ஒகேனக்கல் திட்டம் குறித்து தீர்மானத்தை நிறைவேற்றி விட்டு, தற்போது திடீரென அந்தத் திட்டத்தை ஒத்திவைத்ததாக அறிவித்தமைக்கு காரணம் என்ன? ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டப் பிரச்சினையில் இருமாநில மக்களிடையே பகை வளரும் என்பது நியாயம் இல்லை.

நம்முடைய தண்ணீரைப் பங்கிடுவதற்கு நமக்கே உரிமையில்லையா? தொடர்ந்து ஒவ்வொரு உரிமையாக நாம் இழந்து வருகிறோம். முதல்வர் கருணாநிதி சொந்தலாபத்துக்காக தமிழக மக்களை வஞ்சித்துவிட்டார்.

இலவச வர்ணத் தொலைக்காட்சி வழங்கும் திட்டத்துக்கு செலவிடப்பட்ட தொகையில் நான்கில் ஒரு பங்கு தொகையை இந்தத் திட்டத்துக்கு செலவிட்டிருந்தாலே நிறைவேற்றியிருக்கலாம் - என்றார்.

# ரஜினி மன்னிப்புக் கேட்க வேண்டும் கன்னட நடிகை ஜெயமாலா கோரிக்கை

சென்னை,ஏப்.9

நடிகர் ரஜனிகாந்த் கன்னடர்களை இழிவாகப் பேசியுள்ளார் என்றும், இதற்காக அவர் நிபந்தனையற்ற மன்னிப்புக் கோரவேண்டும் என்றும் கன்னட நடிகை ஜெயமாலா கூறியுள்ளார்.

ஒகேனக்கல் குடிநீர்த்திட்டப் பிரச்சினையில் கர்நாடகாவைக் கண்டித்து சென்னையில் கடந்த 4ஆம் திகதி திரையுலகினர் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அதில் நடிகர் ரஜினிகாந்த் கலந்துகொண்டு பேசியமை பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இதற்காக ரஜினிகாந்த் மன்னிப்புக் கேட்கவேண்டும் என கன்னட அமைப்பினர் வலியுறுத்தியுள்ளனர்.

ஆனால், தாம் தவறாக எதுவும் பேசவில்லை என்றும் எனவே மன்னிப்புக் கோர வேண்டிய அவசியம் இல்லை என்றும் ரஜினி கூறியுள்ளார். இந்த நிலையில், ரஜினியின் பேச்சுக்கு கன்னட நடிகை ஜெயமாலா கண்டனம் தெரிவித்துள்ளார்.

கன்னட மக்களிடம் ரஜினி நிபந்தனையற்ற மன்னிப்புக் கேட்க வேண்டும் என்றும், அதுவே பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்கும் என்றும் ஜெயமாலா கூறியுள்ளார்.

# விடுமுறை காலத்தில் வடமராட்சி ஆசிரியர்களுக்கு செயலமர்வுகளை நடத்துவதற்கு வலயம் ஏற்பாடு

பருத்தித்துறை,ஏப்.9

வடமராட்சி வலயக்கல்வி அலுவலகம் முதலாம் தவணை விடுமுறை காலத்தில் ஆசிரியர்களுக்கான பல்வேறு அபிவிருத்திச் செயலமர்வுகளை நடத்தவுள்ளதாக வலயக் கல்விப் பணிப்பாளர் வி.செல்வராசா தெரிவித்தார். நாளை வியாழக்கிழமை நெல்லியடி ஆசிரிய நிலையத்தில் 9ஆம் தரத்தில் புவியியல் பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான கற்றல்-கற்பித்தல் செயற்பாட்டினை நாளை மறுதினம் 9ஆம் தரத்தில் குடியியல் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான கற்றல்-கற்பித்தல் செயற்பாட்டின் ஆற்றலை மேம்படுத்தும் செயலமர்வும் அன்றைய தினம் 10ஆம், 11ஆம் தரங்களில் தகவல் தொழில்நுட்பம் கற்பிக்கும் ஆசியர்களுக்கான செயற்திட்ட முன்மொழிவு தயாரித்தல் செயலமர்வும் வடமராட்சி வலய கணினி வள நிலையத்தில் நடத்தப்படவுள்ளன.

14ஆம் திகதி 11ஆம் தரத்தில் தமிழ் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான விசேட செயற்திட்ட செயலமர்வு பருத்தித்துறை வட.இந்து மகளிர் கல்லூரியிலும்-15 ஆம் திகதி 7ஆம் தரத்தில் தமிழ் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான விசேட செயல் திட்ட செயலமர்வு வட.இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளன.

16ஆம் திகதி 10ஆம் தரத்தில் சைவநெறி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான சைவநெறி கற்பித்தல் உத்திகளைக் கடைப்பிடித்தல் செயலமர்வு நெல்லியடி ஆசிரிய நிலையத்திலும் 17 ஆம் திகதி 8 ஆம், 9 ஆம் தரங்களில் தமிழ் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான கற்பித்தல் உபகரணத் தயாரிப்பும் கணிப்பீட்டுக் கருவி விளக்கமும் செயலமர்வு பருத்தித்துறை வட.இந்து மகளிர் கல்லூரியிலும்-

அதேதினம் 11ஆம் தரத்தில் முயற்சியாண்மை கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான கற்றல்-கற்பித்தல் செயற்பாட்டினை வினைத்திறன்மிக்கதாக்குதல் செயலமர்வு நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்திலும் 18ஆம் திகதி 11 ஆம் தரத்தில் சைவநெறி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான சைவநெறி கற்பித்தல் உத்திகளைக் கடைப்பிடித்தல் செயலமர்வு நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்திலும்-

18 ஆம் திகதி ஆசிரியர்களுக்கான வழிகாட்டல் ஆலோசனை விழிப்புணர்வுச் செயலமர்வு நெல்லியடி ஆசிரிய நிலையத்திலும் நடத்தப்படவுள்ளன.

இச்செயலமர்வுகளுக்கான நடவடிக்கைகளை வடமராட்சி வலயக் கல்வி அபிவிருத்திப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.உதயகுமார் மேற்கொண்டுள்ளார். (202-218)

# சதாவதானி கதிரைவேற்பிள்ளை குருபூசை தினத்தையொட்டி மாணவரிடையே போட்டிகள்

வடமராட்சி,ஏப்.9

மேலைப்புலோலி சதாவதானி கதிரைவேற்பிள்ளை குருபூசை தினத்தையொட்டி பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்படும் போட்டிகள் எதிர்வரும் 19ஆம் திகதி சனிக்கிழமையும் 20ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் தம்பசிட்டி சதாவதானி கதிரைவேற்பிள்ளை சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பாலர் வகுப்பு முதல் தரம் 5 வரையான மாணவர்களிடையே மனனம், பண்ணிசைப் போட்டிகளும் தரம் 6 முதல் தரம் 11 வரையான மாணவர்களிடையே அவதானம், பொது அறிவுப் போட்டிகளும் நடத்தப்படவுள்ளன.

போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கான பரிசில்கள் சதாவதானி கதிரைவேற்பிள்ளை குருபூசை தின விழாவில் வைத்து வழங்கப்படும். (202-236)

# இனந்தெரியாதோரின் துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் காயம்

யாழ்ப்பாணம்,ஏப்.9

வடமராட்சி வல்லிபுர ஆழ்வார் ஆலயப் பகுதியில் 'ஹன்ரர்' வாகனம் மீது இனந்தெரியாதோர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்தார்.

இச்சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு 7 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் 'ஹன்ரர்' வாகனத்தில் பயணம் செய்தவரான சின்னப்பா கடையடி, துன்னாலையைச் சேர்ந்த கே.துஷிகாந்தன் (வயது 23) என்பவரே படுகாயமடைந்தவர் ஆவார்.

காயமடைந்தவர் மந்திகை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அங்கிருந்து மேலதிக சிசிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். (202)

# யாழ்.இந்துக் கல்லூரியில் கட்டடத்தொகுதி திறப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.9

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் பழைய மாணவர் சங்கத்தால் அமைக்கப்பட்ட கட்டடத் தொகுதியின் திறப்பு விழா நாளை வியாழக்கிழமை நண்பகல் 12 மணிக்கு நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் வீ.கணேசராசா கட்டடத் தொகுதியைத் திறந்துவைப்பார். (202)

## நாளை

| | |
|---|---|
| பங்குனி 28 | 10.04.2008 |
| | வியாழக்கிழமை |
| திதி: பஞ்சமி | மு.இ. 10.26வரை |
| நட்சத்திரம் : | ரோகிணி |
| | பி.ப.03.53வரை |
| [illegible] | 07.36 - 09.06 |
| [illegible] | 01.36 - 03.06 |

# ஒரே குடும்பத்தில் ஆறு பேர் கொடூரமாகச் சுட்டுக்கொலை

## சிறுமியைக் காணோம்; ஊர்காவலர் கைவரிசை

புத்தளம், ஏப்.9

புத்தளம் ஆணைமடு, கருவலகஸ் வெவப் பகுதியில் நேற்றுமுன்தினம் அதிகாலை மூன்று மணியளவில் ஊர்காவற் படையைச் சேர்ந்த ஒருவர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஆறுபேர் உயிரிழந்தனர் என்றும் சிறுமி ஒருவர் காணாமற் போயுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவத்தில் தாய், தந்தை, மகள், அவரது கணவர் ஆகியோர் அவ் விடத்திலேயே உயிரிழந்தனர். மேலும் மூவர் படுகாயமடைந்தனர் என்றும், காயமடைந்தவர்கள் சிலாபம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் அவர்களில் இரு சிறுவர்கள் சிகிச்சை பயனளிக்காது நேற்று மதியம் உயிரிழந்தனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, குடும்பத்தின் மற்றொரு உறுப்பினரான 14 வயதுச் சிறுமியை சம்பந்தப்பட்ட ஊர்காவலரே கடத்திச் சென்றிருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகம் வெளி யிட்டுள்ளனர்.

காணாமற்போன சிறுமியையும் அவரைக் கடத்திச் சென்றவர் என்று கருதப்படும் அஜித் என்ற ஊர்காவலரையும் தேடி வில்பத்து தேசிய வனப் பகுதியில் பொலிஸார் தேடுதல் மேற்கொண்டு வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ)

# கல்வி, சுகாதார கண்காணிப்புக் குழு

ஆனைக்கோட்டை கிராம மட்ட மருத்துவபீட மாணவர்களும் இந்து மாமன்றத்தினரும் இணைந்து ஜே/133 கிராமசேவையாளர் பிரிவிலுள்ள முள்ளி கிராமத்தில் கல்வி, சுகாதார கண்காணிப்பு குழுவொன்றை அமைத்துள்ளனர். (202-100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2007 - ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சையில் குடாநாட்டு மாணவர்களின் பெறுபேறுகள்

யாழ்ப்பாணம், ஏப்.9

கடந்த டிசெம்பர் மாதம் நடைபெற்ற ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையின் முடிவு கள் கடந்த வியாழக்கிழமை யாழ்.மாவட்டத்தில் வெளியாகின.

குடாநாட்டில் உள்ள - அந்தந்தப் பாட சாலைகளின் - அதிபர்களால் 'உதயனுக்கு' வழங்கப்பட்ட பரீட்சை முடிவுகளில் சில வருமாறு:-

**வண்ணை நாவலர் ம.வி**

க.ஆனந் - 4ஏ4பி2சி, கே.மயூரி - 3ஏபி4சி2எஸ், ந.பதுர்சிகா - 2ஏ2பி2சி4எஸ், இ.சூரியகுமாரி -2ஏபி3சி4எஸ், செ.பிரசாந்தினி - ஏ4பி2சி3எஸ், ப.ஜெசிந்தா - ஏ2பி2சி5எஸ், வி.நிலேக்கா 5சி3எஸ், ச.லெட்சுமணன் -3சி3எஸ்.

**கைதடி விக்னேஸ்வர வித்தியாலயம்**

ந.தாரணி 7ஏ2பிசி, து.துஷாந்தினி - 5ஏ4பிசி, க.மைதிலி 5ஏ3 பி2சி, கு.பாலகஜன் - 5ஏ3பிசிஎஸ், கோ.வேணுகா 5ஏ4சிஎஸ், கு.ஜெயமாலா 3ஏ4பி2சிஎஸ், ப.றிஜிந்தா - 3ஏ3பி3சி, ப.பாரிஷா - 3ஏ3பிசி, பொ.அகிலா - 2ஏ3பி2சி2எஸ், க.சஜிதன் - 2ஏ2பி2சி4எஸ், சி.துஷ்யந்தினி - ஏ2பி4சி2எஸ், ம.கலாமதி - ஏ4சி3எஸ், சி.சுபாஸ்கரன் - 6பிசிஎஸ், இ.நிருபாலினி - 3பி3சி2எஸ், ச.பிரசாந்தினி - 2பி4சி2எஸ், க.சர்மிதா - 2பி4சிஎஸ், ந.தமிழினி - பி3சி4எஸ்.

**கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயம்**

க.அகிலா 6ஏ3பிசி, சி.ஜெயந்தன் - 4ஏபி2சி3எஸ், சோ.சடாச்சரன் - 3ஏ4பிசி2எஸ், ப.டுஸ்மோகன் - 2ஏ3பி3சிஎஸ், சோ.சுலக்சனா - 2ஏ3பி3சிஎஸ், ச.லக்மிப்பிரியா - 2ஏபி2சி4எஸ், ச.குவேந்தினி - 2ஏபி3சி2எஸ், த.சாயினேசன் -ஏ2பி5சி2எஸ், த.தனுசா - ஏபி3சிஎஸ், பா.தணிகாசலம் - ஏ4சி4எஸ், மோ.கவிபரன் - 6சி3எஸ்,

**சுன்னாகம் இராமநாதன் கல்லூரி**

சி.நிருபா - 10 ஏ, சி.சிறிஜனா - 6ஏ2பி2சி, கு.பிரியங்கா - 5ஏ4பிசி, க.நிரோபிகா - 4ஏ3பி3சி, ர.யுவநிசா - 4ஏ4சி2எஸ், த.சகிலாமேரி - 3ஏ3பி4சி, சி.லேலினி - 3ஏ2பி3சி2எஸ், மோ.சுவேதிகா - 2ஏ5பி 3எஸ், வினோ - 2ஏ4பி2சி2எஸ்.

**யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி**

என்.துசிகேசன் - 10ஏ, யு.விஜித் - 10ஏ, எஸ்.சிறிசாய்சொருபன் - 9ஏ, ஆர்.பாலசயந்தன் - 9ஏ, எஸ்.ஜனனன் - 9ஏ, எஸ்.பிரகலாதன் - 7ஏ, எஸ்.திவாகர் - 7ஏ, எஸ்.மதுசனன் - 7ஏ, தி.நிரோஜன் - 7ஏ, ஜெ.ஜெமில்ரன் - 6ஏ, ரி.ஜொனி - 6ஏ, பி.அஜந்தன் - 6ஏ, பி.பிரகாஸ் -6ஏ, எஸ்.தினேஸ்குமார் -6ஏ, பி.சரண் - 6ஏ, எல்.சஜீவன் - 6ஏ, பி.தினாகரன் - 6ஏ, ரி.கேசவன் -6ஏ, எம்.பிரசன்னா -6ஏ.

எஸ்.நிபோஜன் - 5ஏ, பி.கயானன் - 5ஏ, கே.சயந்தன் -5ஏ, ஈ.மயூரன் - 5ஏ, ஆர்.மயூரன் -5ஏ, எஸ்.துஷ்யந்தன் -5ஏ.

**கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயம்**

இ.சஞ்ஜியா - 6ஏபிசி2எஸ், உ.தர்சாயினி - 5ஏ2பி2சிஎஸ், இ.தனுஷா - 4ஏ3பி2சிஎஸ், தி.இன்பகுமார் - 4ஏ5சி, வி.மதிசங்கர் - 3ஏபி3சிஎஸ், பா.றேகா - 2ஏ3சி3எஸ், நி.ரவிகரன் - ஏ6பி2சிஎஸ், ச.தனிஸ்ரன் - ஏ2பி3சிஎஸ்.

**கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி**

செ.மதுரங்கன் - 10ஏ, ச.வனுராகினி - 6ஏ4பி, இ.பிருந்தா - 5ஏ3பி2சி, த.இந்திரபாகுலேயன் - 5ஏ2பி3சி, பி.சாருஜன் - 4ஏ3பி2சிஎஸ், ர.பிறேமிளா - 4ஏ2பி4சி, பா.சபிதா - 4ஏ3பி3சி, கு.தாட்சாயினி - 3ஏ3பி4சி, தே.நிசர்சன் - 3ஏபி3சி2எஸ், ச.மயூரா - 3ஏ2பி3சி2எஸ்,

ந.சங்கீதா - 3ஏ2பி3சி2எஸ், ஜெ.சபிதா - 3ஏ2பி3சி2எஸ், வோ.டேமியன்ராஜ் - 2ஏ2பி3சி2எஸ், க.சுமன் - 2ஏ2பி5சி, இ.கிருபாகரன் - 2ஏ3பி4சிஎஸ், பா.யரண்யா - 2ஏ2பி3சி3எஸ், சி.மனோஜ் - 2ஏபி4சி3எஸ், க.சிவதுர்க்கா - 2ஏ5பி2சி, தே.சுபாகரன் - 2ஏ4பி3சி, ச.சாயுதன் - ஏபி5சி3எஸ், சி.தட்சுணா - ஏ4பி2சி3எஸ், தி.சத்தியநிதி - ஏ2பி3சி4எஸ், த.தாட்சாயினி - ஏ2பி4சி3எஸ்.

**செங்குந்தா இந்துக்கல்லூரி**

இ.சுவேந்தா - 6ஏபிசி, நீ.மயூரன் - 4ஏ3பி2சிஎஸ், நிரோசன் - 2ஏ3பி3சி2எஸ்.

**முத்துத்தம்பி மகாவித்தியாலயம்**

சி.சிவாஜினி - 5ஏ3பிசி, வே.துஷ்யந்தன் - 3ஏ3பி2சி2எஸ், ர.கனிதா - 3ஏபி3சிஎஸ், தி.மயூரன் - 2ஏபி3சி3எஸ், த.கிருஷாந்தி - ஏ3பி5சிஎஸ், ஞா.நர்மசீலன் - ஏ2பி3சி3எஸ், தே.சுதர்சன் - ஏபி3சி4எஸ்.


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



**திருமதி மாலினி முரளீதரன்**

(Sp.Trd. in Dance, B.A.(Eco.Spl), Dip. in Edu., M.Edu.)

*யாழ்.நல்லூர் ஸ்தான சி.சி.த.க. பாடசாலையில் ஆசிரியராகப் பணிபுரியும் திருமதி மாலினி முரளீதரன் அவர்கள் கல்வியியல் முதுமாணிப்பட்டம் பெற்றமையையிட்டு பாராட்டி வாழ்த்துவதுடன் அவர்கள் மேலும் பல உயர் பட்டங்களைப் பெற்று சிறப்புடன் வாழ வண்.கிழக்கு அருள்மிகு ஸ்ரீவீரகத்தி விநாயகரைப் பிரார்த்திக்கின்றோம்*

சிவஸ்ரீ து.விவேகானந்தக் குருக்கள் (சந்திரன் ஐயா) குடும்பத்தினரும் சிவஸ்ரீ சி.ஸ்ரீ தயாளன் (கண்ணன் ஐயா) குடும்பத்தினரும்.

*12, சீனியர் ஒழுங்கை, கலட்டி, யாழ்ப்பாணம்.* (72907)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

எமது பாடசாலை ஆசிரியர்களான

**திரு. நடராசா மகேந்திரன் (M.ED)**

**செல்வி வேலும்மயிலும் சிவலோஜினி (M.ED)**

ஆகியோர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் ஆங்கில மொழிமூலம் முது கல்விமாணிப் பட்டம் (M.ED) பெற்றமைக்கு எமது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்வதோடு, அவர்கள் கல்வியில் மென்மேலும் சிறப்புற வாழ்த்தி நிற்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக் கழகம்,
யா/அளவெட்டி அருணாசலம் வித்தியாலயம்.

(72928)

## உனை இழந்து ஓராண்டு...



**செல்வி கதிரன் உதயயோகிதா**

மண்ணில் 02.03.1980

விண்ணில் 22.03.2007

*திதி:09.04.2008*

**தவமிருந்து உனைப் பெற்றோம் - இன்று
தவிக்க விட்டுச் சென்றாயே!
கண்ணே! கனியமுதே! - இனி
எங்கு காண்போம் உனை.**

இன்று (09.04.2008) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஓராண்டு நினைவஞ்சலி நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

தாய், சகோதரன், சகோதரி, அத்தான், பெறாமக்கள்.

கைதடி தெற்கு. (72926)

## வீட்டுக்கிருத்திய அழைப்பு



*கடந்த 10.03.2008 திங்கட்கிழமை அன்று இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவி*

**அமரர் ஆறுப்பிள்ளை இரத்தினம்**

*அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (09.04.2008) புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.*

சகோதரர்கள், மைத்துனிகள், பெறாமக்கள், மருமக்கள், (த.இராசதுரை - சகோதரன்)

*மாசிவன், நீர்வேலி மேற்கு, நீர்வேலி.* (72882)


## சமுர்த்தி நிவாரணம்

நவாலி,ஏப்.9

மானிப்பாய் ப.நோ.கூ.சங்க கிளைகளில் சமுர்த்தி பயனாளிகளுக்கான உலர் உணவு நிவாரணம் தற்போது வழங்கப்பட்டு வருகின்றது.

(202-100)

## கல்விச் சீர்திருத்தச் செயலமர்வு

யாழ்ப்பாணம்,ஏப்.9

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 7 வகுப்புகளில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான புதிய கல்விச் சீர்திருத்தச் செயலமர்வு எதிர்வரும் 16ஆம் திகதி புதன்கிழமை காலை 8 மணிக்கு மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயத்தில் நடைபெறுமென வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் தெரிவித்தார்.

(202-207)


## IBMS

புதிய பிரிவுகள் ஆரம்பம்

சிறப்புக் கட்டணச் சலுகை

பிரிவு I : 03.04.2008 } பகல் 10 மணி
பிரிவு II : 10.04.2008

**Diploma in Microsoft Office - 3 Months**

**Diploma in Desk Top Publishing - 3 Months**

**Diploma in Internet Technology - 3 Months**

**M.M.V. Road, Nelliyady, Karaveddy.**
**T.P.: 0602218784**

## பதவி உயர்வு நிலை வாழ்த்து



நல்லூர் பிரதேச செயலகப் பிரிவின் அரியாலை மத்திமேற்கு (J/92) கிராம உத்தியோகத்தராக 14.03.1998 முதல் 09.03.2008 வரை சிறப்புப் பணியாற்றி காரைநகர் பிரதேச செயலகத்திற்கு நிர்வாக உத்தியோகத்தர் (அதிவிசேடதரம்)

ஆகப் பதவி உயர்வு பெற்றுச் செல்லும்

**திரு.சுந்தரம் செல்வநாதன்,**

அவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

நற்பணி ஆற்றி மக்கள்
நெஞ்சினில் இடமே கொண்ட
பொற்புறு சுந்தரம் செல்வநாதன்
பெருமிதம் பெறவே வாழி!

அரியாலை மத்திமேற்கு (J/92) வாழ் நண்பர்கள்

(இ/552230)

## நன்றி நவிலல்



**திருமதி மணிமேகலாதேவி திருஞானசம்பந்தர்**

*(முன்னாள் பிரதி அதிபர், மானிப்பாய் மகளிர் கல்லூரி)*

29.03.2008 அன்று அகாலமரணமடைந்த செய்தியைக் கேட்டு எமது இல்லத்துக்கு உடனே வந்து எங்களுக்கு பல வழிகளிலும் உதவி புரிந்த அயலவர்கள், உறவினர்கள், நண்பர்கள், அன்பர்கள், பாடசாலைச் சமூகத்தினர்கள் அனைவருக்கும் மேலும் வெளிநாடுகளிலும், உள்நாடுகளிலும் தொலைபேசி மூலம் துயர் பகிர்ந்து கொண்டவர்களுக்கும் பத்திரிகை மூலம் கண்ணீர் அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டு ஆறுதல் கூறியவர்களுக்கும், இறுதி ஊர்வலத்தில் பங்குகொண்ட ஒவ்வோர் உள்ளங்களுக்கும் எமது உளம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தகவல்:
கணவர் - திருஞானசம்பந்தர் (ஓய்வுபெற்ற ஆங்கில ஆசிரியர்).

*லோட்டன் வீதி, மானிப்பாய்.* (சி/552229)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரான்ஸில் நான்கு தடவைகள்! அணைந்த ஒலிம்பிக் தீப்பந்தம்!!

## திபெத்திய ஆர்ப்பாட்டக்காரர்களின் எதிர்ப்பால்!

பாரீஸ், ஏப். 09

திபெத்திய ஆர்ப்பாட்டக்காரர்களின் எதிர்ப்பால் பிரான்ஸ் தலைநகர் பாரீஸில் ஒலிம்பிக் தீப்பந்தம் நேற்றுமுன்தினம் நான்கு தடவைகள் அணைக்கப்பட்டது.

பலத்த பாதுகாப்பு அளிக்கப்பட்டிருந்த போதும் போராட்டக்காரர்களைத் தடுக்க முடியவில்லை. இதனால், அடுத்து வரும் ஓட்டங்களிலும் இது தொடருமா என்ற கேள்வி எழுந்துள்ளது.

எதிர்வரும் ஓகஸ்டில் சீனத் தலைநகர் பீஜிங்கில் 29ஆவது ஒலிம்பிக் போட்டி நடக்க உள்ளது. இதில் திபெத் மற்றும் தைவான் அணிகள் சேர்ந்து 'ஒருங்கிணைந்த சீன அணியாக' கலந்து கொள்ளும் என சீனா அறிவித்தது. இது விடுதலை கோரி போராடி வரும் திபெத்தியர்கள் மத்தியில் கோபத்தை ஏற்படுத்தியது. இவர்கள் மீது சீனா நடத்திய தாக்குதலில் நூற்றுக்கணக்கானோர் கொல்லப்பட்டனர். இதையடுத்து ஒலிம்பிக் போட்டியைப் புறக்கணித்து, சீனாவுக்கு பதிலடி கொடுக்க வேண்டுமென மனித உரிமை அமைப்புகள் கோரிக்கை விடுத்தன.

இத்தகைய பிரச்சினைகளைக் கடந்து ஒலிம்பிக் ஜோதி தனது உலக பயணத்தைத் தொடக்கியது. இந்த ஜோதி கடந்த ஞாயிற்றுக்கிழமை பிரிட்டன் தலைநகர் லண்டனுக்கு வந்தது. இதில் தொலைக்காட்சித் தொகுப்பாளினி கோனி ஹக் ஜோதியுடன் ஓடி வந்த போது, திபெத்திய போராட்டக்குழுவைச் சேர்ந்த ஒருவர் திடீரென பாய்ந்தார். ஜோதியை அவரது கையில் இருந்து பறித்து அணைக்க பார்த்தார். உடனே பொலிஸார் அவரை பிடித்து கீழே தள்ளினர். பின்னர் ஹொலண்ட் பார்க் மற்றும் புளூம்ஸ்பரி அருகேசிலர் ஜோதியை அணைக்க முற்பட்டனர். இந்த முயற்சியும் தடுக்கப்பட்டு, 40 பேர் கைது செய்யப்பட்டனர்.

பின்னர் தனது பயணத்தைத் தொடர்ந்த ஒலிம்பிக் ஜோதி நேற்றுமுன்தினம் பிரான்ஸ் தலைநகர் பாரீஸ் வந்தது. பிரபல 'ஈபிள் டவர்' முன்பாக பிரான்ஸ் தடகள நட்சத்திர வீரர் ஸ்டீபனே டையகானா ஓட்டத்தை இங்கு ஆரம்பித்து வைப்பதாக இருந்தது. லண்டனைத் தொடர்ந்து திபெத்தியர்கள் மற்றும் மனித உரிமை அமைப்புகள் இங்கும் போராட்டம் நடத்தக்கூடும் என்பதால் பலத்த பாதுகாப்புக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. 200 ரோந்துப் பொலிஸார், 50 வாகனங்கள் பாதுகாப்பில் ஈடுபடுத்தப்பட்டிருந்தன.

இதையும் மீறி பாரீஸில் நூற்றுக்கணக்கில் திபெத்தியர்கள் ஆர்ப்பாட்டத்தில் இறங்கினர். பாதுகாப்புக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பேரூந்துக்கு 100 மீற்றர் தூரத்துக்கு முன்னதாக போராட்டக்காரர்கள் ஜோதியை சூழ்ந்து கொண்டனர். இதையடுத்து ஒலிம் பிக் ஜோதி பாதுகாப்பு அதிகாரிகள் தாங் களே ஜோதியை அணைத்துவிட்டு பஸ்ஸிற்குப் பத்திரமாக கொண்டு சென்றனர். பின்னர் மீண்டும் ஓட்டம் தொடங்கியது. அப்போதும் போராட்டக்காரர்கள் சூழ்ந்து கொள்ள மீண்டும் அணைக்கப்பட்டது. இவ்வாறு நான்கு தடவைகள் பிரான்ஸ் ஓட்டத்தின்போது ஒலிம்பிக் ஜோதி அணைக்கப்பட்டதாக அறிய முடிகின்றது.

இதேவேளை, எதிர்வரும் 17ஆம் திகதி ஒலிம்பிக் ஜோதி இந்தியா வருகிறது. டில்லியில் நடக்கும் ஒலிம்பிக் ஓட்டத்தில் இந்தியக் கால்பந்து நட்சத்திரம் பூட்டியா, திபெத்துக்கு ஆதரவாக கலந்து கொள்ளப் போவதில்லை என அறிவித்தார். இதையடுத்து ஓட்டத்தில் இந்தியக் கிரிக்கெட் அணி வீரரான சச்சின் கலந்து கொள்வார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## கார் சாரதியின் கவனக்குறைவாலேயே டயானா கொல்லப்பட்டாரெனத் தீர்ப்பு

லண்டன், ஏப். 09

கார் சாரதியின் கவனக் குறைவாலேயே விபத்தில் டயானா கொல்லப்பட்டார் என்று விசாரணை நடத்திய நீதிபதிகள் தங்கள் இறுதித் தீர்ப்பில் கூறியுள்ளனர்.

இங்கிலாந்து இளவரசர் சார்ள்ஸைப் பிரிந்து வாழ்ந்த அவரது காதல் மனைவி டயானா 1997ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் பிரான்ஸ் தலைநகர் பாரீஸில் நடந்த கார் விபத்தில் பலியானார். அங்குள்ள ஒரு சுரங்கப் பாதை யில் டயானாவும் அவரது காதலர் டோடி பயத்தும் சென்றுகொண்டிருந்த காரைப்புகைப்படக்காரர்கள் துரத்திச் சென்றனர். இதனால் வேகமாகச் சென்ற டயானாவின் கார் சுரங்கப் பாதையில் மோதி நொறுங்கியதில் அவரும் அவரது காதலரும் பலியானார்கள்.

டயானாவின் இந்த மரணம் குறித்து பல சர்ச்சைகள் எழுந்தன. இங்கிலாந்துச் சட்டப்படி ஒருவர் இயற்கைக்கு மாறாக மரணமடைந்தால் அதுபற்றி விசாரணை நடத்தி உண்மையைக் கண்டறியவேண்டும். எனவே டயானாவின் மரணம் பற்றி விசாரணை நடத்த உத்தரவிடப்பட்டது. இது குறித்து லண்டன் மேல்நீதிமன்றில் 11 நீதிபதிகள் விசாரணை நடத்தினார்கள். 252 சாட்சிகளிடம் நீதிபதிகள் விசாரணை மேற்கொண்டனர். விபத்து தொடர்பான வீடியோ காட்சிகளையும் அவர்கள் பார்வையிட்டனர்.

விசாரணை முடிந்ததைத் தொடர்ந்து நீதிபதிகள் நேற்றுமுன்தினம் இறுதித் தீர்ப்பு வழங்கினர்.

## ஐரோப்பிய ஒன்றியத்தின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தீவிரமடைந்துள்ள பயங்கரவாதத் தாக்குதல்கள் காரணமாகப் பாதுகாப்புக் கரிசனைகள் அதிகரித்தமை, சர்வதேச சந்தையில் பெற்றோல் மற்றும் அத்தியாவசியப் பொருள்களின் விலை அதிகரிப்பால் விலை ஸ்தி ரத்தன்மை அச்சுறுத்தல்களுக்குள்ளா னமை போன்ற சவால் மிகுந்த சூழலில் 6.8 வீத பொருளாதார வளர்ச்சி மிகவும் பாராட் டத்தக்கது.

இலங்கை மத்திய வங்கி அறிமுகப் படுத்திய கடுமையான நாணய கொள்கை காரணமாக 2007 இன் முதல் காலாண்டுப் பகுதியில் பணவீக்கத்தைக் குறைக்க முடிந்தது.

2007 ஆம் ஆண்டு பொருளாதார வளர்ச்சிக்கு கைத்தொழில்துறை மற்றும் சேவைத் துறையில் ஏற்பட்ட வளர்ச்சியே காரணம்.

கைத்தொழில்துறையின் நடவடிக்கைகளுக்கு ஐரோப்பிய ஒன்றியத்தின் 'ஜி.எஸ்.பி.' விசேட ஏற்றுமதிச் சந்தை சலுகையும் இரு தரப்பு பிராந்திய பொருளாதார உடன்படிக் கைகளுமே அனுகூலமாக அமைந்தன.

எனினும், ஐரோப்பிய ஒன்றியத்தின் 'ஜி.எஸ்.பி.' சந்தை வாய்ப்புச் சலுகை பொருளாதாரத்துடன் தொடர்பற்ற காரணங்களுக்காக விலக்கப்படலாம் என்பதால் கைத்தொழில்துறை இவ்வாறான சலுகைகள் அற்ற நிலையிலும் செயற்படத் தயாராக வேண்டும்.

இலங்கை 2007 இல் 73 கோடி 40 லட்சம் டொலர் வெளிநாட்டு நேரடி முத லீட்டைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது. - என்று தெரிவிக்கப்ப ட்டிருக்கின்றது. (அ-உ)

## சர்வதேச சக்திகளின்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நான்உயர்படிப்பைக்கூடதூக்கி வீசிவிட்டு இந்தக் கட்சியில் சேர வந்தபோது இதில் சேர வேண்டாம் என்று எனது தந்தை கூறனார்.

மீறிச்சேர்ந்தால் தான் விசம் குடித்துச் செத்துவிடுவார் என்றும் அவர் கூறினார். அவரது உத்தரவை உதறித்தள்ளிவிட்டு என் உயிரையும் பற்றிக் கவலைப்படாது ஜே.வி.பியில் சேர்ந்தேன்.

அன்று முதல் இன்று வரை என்மனசாட்சிக்கு எதிராக நான் கட்சியில் செயற்பட்டதில்லை.

2005ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின்போது தாய்நாட்டுக்கு எதிரான சர்வதேச சக்திகளுக்கு சவால் விடும் வகையில் நான் செயற்படத் தொடங்கினேன். அன்று முதல் அந்தச் சர்வதேச சக்திகள் என் குரலை நசுக்கிவிட அல்லது என்னைக் கொலைசெய்து விட முயல்கின்றன.

அந்தச் சர்வதேச சக்திகளுடன் ஜே.வி.பியில் உள்ள சிலர் கூட்டுச் சேர்த்துள்ளனர். அதனைத் தொடர்ந்தே எனக்கு இந்தக் கதி ஏற்பட்டுள்ளது.

நான் அறிந்தவரை நான் எந்தத் தப்பும் செய்யவில்லை. சர்வதேச சக்திகளின் சூழ்ச்சியே எனக்கு எதிரான கட்சியின் இந்தத் தீர்மானம்.

என்னை அழிக்க முற்படும் இச்சக்திகள் என்னைப் பற்றியும் எனது தலைமுடி பற்றியும் எனது மனைவி பற்றியும் விமர்ச்சிக்கத் தொடங்கின. அந்தளவு என் மீது கோபம்.

நான் தாய் நாட்டின் மீது பற்றுக் கொண்டு கட்சியில் இருந்து செயற்படுவதே இதற்கெல்லாம் காரணம். அப்படிப்பட்ட எனக்கு எனது கட்சியில் இப்படி ஒரு கதி நேரும் என்று நான் கனவில் கூட நினைக்கவில்லை.

கட்சியிலிருந்து என்னை வெளியேற்றும் நடவடிக்கை என்னைக் கொலை செய்வதற்கு ஒப்பானது.

இந்த முடிவை கிழக்கு மாகாண சபைத் தேர்தல் முடியும் வரைத் தள்ளி வைத்து பின்னர் அறிவிப்பது என்றுதான் அவர்கள் ஆரம்பத்தில் தீர்மாணத்திருந்தார்கள். - என்றார் அவர். (சி)

## இரண்டாக...

(முதலாம் பக்கத் தொடர்சி)

எனினும், கடைசியாக இடம்பெற்ற நடாளுமன்றத் தேர்தலில் ஜே.வி.பியில் வெற்றி பெற்று எம்.பியான பதினொரு புதுமுகங்களே இப்போது விமல் வீரவன்ஸவுக்குப் பின்னால் அணி சேர்ந்துள்ளனர் என்றும் -

கட்சியின் 38 நாடாளுமன்ற உறுபினர்களில் கட்சியின் மூத்த செல்வாக்குள்ள தலைவர்கள் எவரும் விமலின் பக்கத்தை ஆதரிக் கவில்லை என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

களுத்துறை மாவட்ட எம்.பிக்களான ஜயந்த சமரவீர, பியசிறி விஜேநாயக்க, புத்தளம் மாவட்ட எம்.பிக்களான பிரியங்கா திஸநாயக்கா, சமரசிறி ஹேறத், மொனறாகலை மாவட்ட எம்.பியான பத்ம உதயசாந்த, இரத் தின புரி மாவட்ட எம்.பியான அச்சல ஜகொட, தீபல் குணசேகர, நுவரெலியா மாவட்ட எம்.பிக்களான நிமால் பிரேமவன்ஸ, மாத் தளை எம்.பியான சுஜாத அழகக்கோன், தேசியப் பட்டியல் எம்.பியான மொஹமட் முஸாமில் போன்றோரே இப்போது விமலின் அணியில் உள்ளனர்.(சி)

## தற்கொலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்த நபர் பிறவுண் நிற 'சேட்' அணிந்திருந்தார் என்றும் அமைச்சருக்கு சில அடி தூரம் பின்னாலிருந்து குண்டுத் தாக்குதலை மேற்கொண்டுள்ளார் எனவும் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

அந்நபர் குண்டுத் தாக்குதலை மேற்கொள்வதற்கு வருகை தந்த விதம் வீடியோ கமெராவில் பதிவாகியுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தத் தற்கொலைக் குண்டுதாரியுடன் அவரது உதவியாளராகச் செயற்பட்ட இன்னொருவரும் அந்த இடத்தில் இருந்தமை வீடியோவில் பதிவாகியுள்ளமை தற்போது தெரியவந்துள்ளதாம்.

அந்த உதவியாளர் தனது கைத்தொலைபேசி ஊடாகப் பல தடவைகள் அழைப்பைப் பெற்றுக்கொண்ட விதமும் வீடியோ நாடாவில் பதிவாகியிருப்பதைப் பொலிஸார் உறுதி செய்தனர்.

தாக்குதல் மேற்கொள்வதற்குச் சில விநாடிகளுக்கு முன்னர் உதவியாளராகச் செயற்பட்டவர் அந்த இடத்தை விட்டு வெளியேறியுள்ளமையும் விசாரணைகளின்போது தெரியவந்துள்ளது. (சி)

## மரண அறிவித்தல்கள்

### செல்வி காசிப்பிள்ளை சிவஞானேஸ்வரியம்மா



சித்திரமேழி, இளவாலையைப் பிறப்பிடமாகவும், சுதுமலை வடக்கு, மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி காசிப்பிள்ளை சிவனேஸ்வரியம்மா (ஈஸ்வரி) 07.04.2008 திங்கட்கிழமை சிவபதம் அடைந்தார்

அன்னார் காலஞ்சென்றவர்களான காசிப்பிள்ளை-தெய்வானைப்பிள்ளை தம்பதியினரின் அன்புமகளும், காலஞ்சென்ற கந்தசாமி (அரச நிலஅளவையாளர்) இரத்தினம்மா, சிவராசா (ஓய்வுபெற்ற அதிபர் கொழும்பு) மனோன் மணி, சிவகுமாரன்(லண்டன்) ஆகியோரின் அன்புச்சகோதரியும் கலாதேவி (ஆசிரியை, அளவெட்டி வடக்கு அ.மி.த.க.பா.) நாகரத்தினம் (கிராம சேவையாளர், வட்டு வடக்கு) கிருபாமலர் (கொழும்பு) சத்தியசீலன் (ஆசிரியர், மானிப்பாய் இந்துக்கல்லூரி) உஷாதேவி (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனியும் சோபனா, அனுசன் (பொறியியலாளர், சிங்கப்பூர்), தர்சன் (சிங்கப்பூர்), அனோஜன் (லண்டன்), சுபோதினி( கொழும்பு), தர்மேந்திரன் (லண்டன்), வனிதா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியும் கிருதரன் (லண்டன்), கீதா (கனடா), குமுதா, செந்தில்குமரன் (மாணவன், யாழ்.இந்தக் கல்லூரி), பிரியத்தினி (மாணவி, வேம்படி மகளிர் கல்லூரி) ஆகியோரின் பெரிய தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.04.2008) வியாழக்கிழமை மு.ப. 10 மணியளவில் சுதுமலை வடக்கு வசிப்பிடத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மே/பா, க.சத்தியசீலன் ஆசிரியர்
சுதுமலை வடக்கு,
மானிப்பாய்.

தகவல்:
க.சிவராசா
[சகோதரன்- ஓய்வு பெற்ற அதிபர்]

(72948)

### சதாசிவம் செல்லம்மா

சிறுப்பிட்டி கிழக்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொழும்பை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட சதாசிவம் செல்லம்மா நேற்று (8.04.2008) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சபாபதி - சோதிப்பிள்ளை தம்பதியினரின் மகளும் சதாசிவத்தின் மனைவியும் சிவச்செல்வி, ஜெயச்செல்வி(கனடா) ஆகியோரின் தாயாரும் பொன்னம்மா, குகதாஸன் (அதிபர்- ஆவரங்கால் நடராச ராமலிங்க வித்தியாசாலை), கோபாலசிங்கம்(அமெரிக்கா), பரமேஸ்வரன் (கல்வி அதிகாரி, முல்லைத்தீவு), குகனேஸ்வரன் (கனடா), கலாவதி (கனடா) ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் சடங்குகள் கொழும்பில் உள்ள அவரது தற்காலிக வதிவிடத்தில் இன்று (09.04.2008) பி.ப இடம் பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கனத்தை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிறுப்பிட்டி கிழக்கு, நீர்வேலி.
தொ.பே. 0602216135 (யாழ்.),
0602150029 (கொழும்பு).

தகவல்:
தம்பு சின்னராசா
(சகோதரன்).

(A)

## மரண அறிவித்தல்கள்

### பொன்னம்பலம் திருநாவுக்கரசு



செட்டிக்குறிச்சி, பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும் மட்டுவில், சரசாலையை (மெய் கண்டான் ஒழுங்கை) வதிவிடமாகவும் கொண்ட அமரர் பொன்னம்பலம் திருநாவுக்கரசு அவர்களின் அன்பு மனைவி சரஸ்வதி நேற்றைய தினம் அமரராகிவிட்டார்.

அன்னார் பத்மாவதி, பொன்னம்பலம், சண்முகதாஸ், சாந்தநாயகி ஆகியோரின் அன்புத் தாயாரும், அமரர் ஜெயதேவன், சந்திராதேவி, சந்திராதேவி, சற்குணராசா ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.04.2008) புதன் கிழமை மு.ப. 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சம்பில்துறை இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மிதிலை,
செட்டியகுறிச்சி,
பண்டத்தரிப்பு.

தகவல்:
சண்முகதாஸ்
(மகன்)

### சுப்பையா கணேசு

டச்சுவீதி, மானிப்பாயை வசிப்பிடமாகக் கொண்ட சுப்பையா கணேசு நேற்று முன்தினம் (07.04.2008) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பையா - பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும், சரவணை மேற்கு, வேலணையைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - அன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், சுதந்திரலட்சுமியின் அன்புக் கணவரும், புவியரசி (வடமாகாண உட்கட்டுமாண அமைச்சு, திருகோணமலை), குபேரன் (பிரான்ஸ்), நவநீதன் (இந்தியா), பிரதீபா (யாழ்.உயர் தொழிநுட்பக் கல்லூரி HND A 3ஆம் வருட மாணவி), சயந்தன் (பழைய மாணவன், மானிப்பாய் இந்துக் கல்லூரி) ஆகியோரின் ஆருயிர்த் தந்தையும், கோகுலனின் (வடமாகாண பொது நிர்வாக செயலகம், திருகோணமலை) அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.04.2008) புதன் கிழமை நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,நண் பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

டச்சு வீதி,
மானிப்பாய்.

தகவல்:
கோகுலன் புவியரசி
(மகள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடாளுமன்றில் ஐ.தே.கவினர் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரச அமைச்சர்கள் சிலரும் ஐ.தே.கட்சியினர் சிலரும் ஒன்றிணைந்து இந்தச் சண்டையை விலக்கிவிட முற்பட்டனர்.

இருப்பினும் நீண்ட இழுபறியின் பின்னரே அவர்களின் சண்டையை விலக்க முடிந்தது.

இதனைத் தொடர்ந்தும் ஐ.தே.கட்சியினர் தரையில் அமர்ந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். ஆர்ப்பாட்டத்தைக் கைவிடுமாறு சபாநாயகர் கேட்டுக்கொண்டபோதும் அவர்கள் அதை நிறுத்தவில்லை.

இதனைத் தொடர்ந்து சபாநாயகர் சபையை 5 நிமிடங்களுக்கு ஒத்திப்போடுவதாக அறிவித்தார்.

முன்னதாக நேற்றுக்காலை சபை கூடியதும் நாடாளுமன்ற பதில் செயலாளர் நாயகமாக தம்மிக்க கித்துல்கொட நியமிக்கப்பட்டமை குறித்து சபாநாயகர் அறிவித்தார்.

சபாநாயகரின் இந்த அறிவித்தலைத் தொடர்ந்து இது தொடர்பாக ஐ.தே.கட்சியின் பிரதம கொறடா ஜோஸப் மைக்கல் பெரேரா அறிக்கை ஒன்றை வெளியிட்டார். அதில் இந்நியமனம் அரசமைப்புக்கு முரணானது என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

அந்த அறிக்கைக்குப் பதிலளித்த பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க இந்த நியமனம் சட்டரீதியானது என்று கூறினார்.

14 நாட்களுக்கு மாத்திரம் பதில் செயலாளர் நாயகமாக தம்மிக்க நியமிக்கப்பட்டுள்ளார் என்றும் அதற்கு அரசமைப்பில் இடமுண்டு என்றும் பிரதமர் கூறினார்.

இரு தரப்பின் கூற்றுக்களையும் செவிமடுத்த சபாநாயகர் இந்த நியமனம் சட்டரீதியானது என்று கூறினார்.

இதன்பின்பே செயலாளர் நாயகம் தம்மிக்க கித்துல்கொட சபைக்கு வந்து அவரது ஆசனத்தில் அமர்ந்தார்.

அதனைத் தொடர்ந்து முஸ்லிம் காங்கிரஸ் எம்.பிக்கள் மூவரின் இராஜினாமாக் கடிதங்களை செயலாளர் நாயகம் வாசிக்க ஆயத்தமானபோது ஐ.தே.கட்சி எம்.பி. தயாசிறி ஜயசேகர உடனே சபாநாயகர், செயலாளர் நாயகம் ஆகியோர் முன்னிலையில் வந்து நின்று ஆர்ப்பாட்டம் செய்தார்.

இதனைத் தொடர்ந்தே ஏனைய ஐ.தே.கட்சி எம்.பிக்களும் ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டனர்.

இதன்பின் சபை ஒத்திவைக்கப்பட்டு மீண்டும் கூடியபோது விமல் வீரவன்ஸ விசேட கூற்று ஒன்றை ஆற்ற சபாநாயகர் அனுமதி வழங்கினார்.

### இரண்டாவது முறையாக ஆர்ப்பாட்டம்

இதனைத் தொடர்ந்து சட்டமூலங்களை நிறைவேற்ற சபாநாயகர் முயற்சித்தபோது ஐ.தே.கட்சியினர் மீண்டும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இரண்டாவது தடவையும் தயாசிறி ஜயசேகரவே ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டார். அதனைத் தொடர்ந்தே ஏனைய ஐ.தே.கட்சி எம்.பிக்களும் அவருடன் இணைந்துகொண்டனர்.

அந்த நிலையிலேயே சட்டமூலங்கள் நிறைவேற்றப்பட்டன.

பிறகு தயாசிறி ஜயசேகர அவரது ஆசன இடத்தில் போய் நின்று அங்கிருந்தபடி எதிர்ப்பைத் தொடர்ந்து தெரிவித்தார்.

### சபை மீண்டும் ஒத்திவைப்பு

இது தொடர்பாக கட்சித் தலைவர் கூட்டத்தைக் கூட்டுவதற்காக சபாநாயகர் சபையை மீண்டும் இரண்டாவது தடவையாக ஒத்திவைத்தார்.

12.45 இற்கு சபை மீண்டும் கூடியது.

இந்நியமனம் தொடர்பாக கட்சித் தலைவர் கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டது என்று கூறிய சபாநாயகர் முன்னாள் செயலாளர் நாயகம் பிரியாணி விஜயசேகரவைக் கௌரவிப்பதற்காக அவர் சபைக்குள் அப்போது அழைத்து வரப்படுவார் என்றும் அவருக்கான பிரியாவிடைப் பிரேரணை கொண்டு வரப்படும் என்றும் கூறினார்.

### மூன்றாவது முறையாகவும் ஆர்ப்பாட்டம்

இருப்பினும் தம்மிக்க கித்துல்கொட சபையில் இருக்கும் போது சபையை நடத்த முடியாது என்று கூறிய ஐ.தே.கட்சியினர் மீண்டும் மூன்றாவது தடவையாக சபாநாயகர் முன் வந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தம்மிக்க கித்துல்கொடவை விரட்டி விட்டே பிரியாணிக்கு பிரியாவிடைப் பிரேரணை கொண்டு வர வேண்டும் என்றும் அவர்கள் கூறினர்.

அப்போது பிரியாணி விஜயசேகரவின் உறவினர்களும் பார்வையாளர் தொகுதியில் அமர்ந்திருந்தனர். இந்த ஆர்ப்பாட்டத்தால் அவரின் உறவினர்களுக்கு அசௌகரியம் ஏற்படுமாக விருந்தால் அதற்காக தாம் மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறார் என்று சபாநாயகர் கூறினார்.

தொடர்ந்தும் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டதால் பிற்பகல் ஒரு மணிக்கு சபை பகல் உணவுக்காக ஒத்திப்போடப்பட்டு 1.30 மணிக்கு மீண்டும் கூடியது.

அப்போதும் ஐ.தே.கவின் ஆர்ப்பாட்டம் தொடர்ந்தது. இந்த ஆர்ப்பாட்டத்தின் மத்தியில் பிரியாணி விஜயசேகரவிற்கான பிரியாவிடைப் பிரேரணை அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவால் சமர்ப்பிக்கப்பட்டு அதன் மீதான உரை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

அந்தப் பிரேரணை மீது, எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க உரையாற்றும்போது மாத்திரமே ஆர்ப்பாட்டம் சற்று இடைநிறுத்தப்பட்டது. அவர் பேசி முடிந்ததும் அது மீண்டும் தொடர்ந்தது.

ரணிலைத் தொடர்ந்து ஆர். சம்பந்தன் பேச அழைக்கப்பட்டார். இந்த ஆர்ப்பாட்டக் கோஷங்கள் மத்தியில் தன்னால் பேசமுடியாது என்று கூறி சம்பந்தன் பேச மறுத்துவிட்டார்.

### கிண்டல் கலாட்டா

அதேபோல் அரச தரப்பில் அமைச்சர்கள் டக்ளஸ் தேவானந்தா, பேரியல் அஷ்ரப் ஆகியோரும் இந்தக் கூச்சல்கள் மத்தியில் பேச முடியாது என்று கூறி மறுத்துவிட்டனர்.

இதேவேளை, பிற்பகல் 2 மணிக்கு சபைக்குள் நுழைந்த அமைச்சர் மேர்வின் சில்வாவும் இன்னும் சில அமைச்சர்களும் ஆர்ப்பாட்டக்காரர்களுடன் தாமும் சேர்ந்து கிண்டலாக - நகைச்சுவையாக - கோஷமெழுப்பினர்.

காலையில் இரு தரப்பினரின் கைகலப்புடன் ஆரம்பமான ஆர்ப்பாட்டத்தை பிற்பகல் இரு தரப்பினரும் சேர்ந்து நகைச்சுவையாக முன்னெடுத்துச் சென்றனர்.

ஆர்ப்பாட்டக் கூட்டத்திற்குள் நுழைந்த அமைச்சர் மேர்வின் சில்வாவின் இடுப்பில் கிள்ளி அவருக்குக் கூச்சமூட்டினார் ஐ.தே.க. கட்சியின் எம்.பி தலதா அத்துகோரள.

அப்போது மேர்வின் சில்வா கூச்சத்தால் தடுமாறி தலதாவின் கையைப் பிடித்து இழுத்ததால் தலதா அணிந்திருந்த வளையல்களில் ஒன்று உடைந்து கீழே வீழ்ந்தது.

இந்த நிலையிலேயே சபாநாயகர் நாடாளுமன்றத்தை ஒத்திப்போட்டார். நாடாளுமன்றம் இன்று காலை 9.30 மணிக்கு மீண்டும் கூடுகிறது.

காலை 9.45 மணியளவில் ஆரம்பமான ஆர்ப்பாட்டம் பிற்பகல் 2.30 மணி வரை விட்டு விட்டு மூன்று தடவைகள் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (சி)

# குடாநாட்டில் 'வைரஸ்'...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காலம் மாறிப் பெய்துவரும் மழைகாரணமாக இந்தக் காய்ச்சல் பரவுபவதாகவும் -

மூன்று முதல் ஐந்து நாள்களுக்கு இந்தக் காய்ச்சல் தொடர்ந்து ஒருவரைத் தாக்கும் என்றும் - வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தக் சாய்ச்சலால் பீடிக்கப்படுவோர் வைத்தியசாலைகளிலும், கிராமிய மருந்தகங்களிலும், தனியார் வைத்திய நிலையங்களிலும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

'டெங்கு', 'ரைப்ஸ்' போன்ற காய்ச்சல்களும் பரவுவதால், காய்ச்சால் பீடிக்கப்படுபவர்கள் தாமதிக்காது வைத்திய பரிசோதனைக்குச் செல்வது சிறந்தது என்று வைத்திய வட்டாரங்கள் ஆலோசனை தெரிவித்தன. (அ-1)

# 'பிரபாகரன்' திரைப்பட சுருளை வழங்க மறுப்பு

சென்னை, ஏப். 9

'பிரபாகரன்' திரைப்படச் சுருளை அதன் இயக்குநர் துஷாரா பீரிஸிடம் கையளிப்பதற்கு மறுப்புத் தெரிவித்துள்ள சென்னை ஜெமினி திரைப்படக் கூடம், மத்திய அரசிடமிருந்து அனுமதி பெற்றுவந்தால் படச்சுருளை வழங்க முடியும் எனவும் கூறியுள்ளது.

இதனால், இயக்குநர் துஷாரா பீரிஸ் பெரும் சிக்கலில் உள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

துஷாரா பீரிஸ் படத்தை பிரிண்ட் போடுவதற்காக நெகட்டிவுடன் சென்னைக்கு வந்தார். ஜெமினி திரைப்படக் கூடத்தில் பிரிண்ட் போடும் பணி நடந்தது. இதை அறிந்த திரையுலகினர், விடுதலைச் சிறுத்தைகள், தமிழ் அமைப்பினர் விரைந்து சென்று பிரிண்ட் போடும் பணியைத் தடுத்து நிறுத்தினர். பின்னர் பீரிஸ் தாக்குதலுக்கும் உள்ளானார்.

இப்படத்துக்குத் தடை விதிக்கக் கோரி சென்னை சிவில் நீதிமன்றில் விடுதலைச் சிறுத்தைகள் தலைவர் திருமாவளவன் வழக்குத் தொடர்ந்திருந்தார். அதை விசாரிந்த நீதிமன்றம் 'பிரபாகரனு'க்கு இடைக்காலத் தடை விதித்தது. விளக்கமளிக்குமாறு பீரிஸ் உள்ளிட்டோருக்கு நோட்டீஸும் அனுப்பப்பட்டது.

படச்சுருளைப் பெற்றுத் தரக்கோரி இலங்கை அரசை வலியுறுத்தி காலவரையற்ற உண்ணாவிரதப் போராட்டத்தில் பீரிஸ் ஈடுபட்டிருந்தார். இந்த நிலையில் தனது உண்ணாவிரதத்தை முடித்துக் கொண்டு சென்னைக்குக் கிளம்பி வந்தார். நேராக ஜெமினி திரைக்கூடம் சென்று அவர் படச் சுருளை திரும்பத்தரும்படி கேட்டார். ஆனால், ஜெமினி திரைப்பட நிர்வாகிகள் படச்சுருளை வழங்க மறுத்துவிட்டனர்.

# மதவாச்சி, ஓமந்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடவடிக்கைளின் பின்னர் ஓமந்தைக்கு அப்பால் அனுப்பி உதவும் வண்ணம், நுழைவாயில்களில் ஐ.சி.ஆர்.சியின் பிரசன்னத்தை ஐந்திலிருந்து ஆறு நாளாக அதிகரிக்குமாறு அரசாங்கம் விடுத்த கோரிக்கைக்கு ஐ.சி.ஆர்.சி செவிமடுத்தது. இந்த நடவடிக்கைகளைத் துரிதப்படுத்துவதற்காக அரசாங்கமும் மேலதிக ஆளணியினரை ஓமந்தை நுழைவாயிலில் நிறுத்தியிருந்தது.

* மாசி மாதத்தில் மட்டும் இருபக்கமும் இருந்து ஓமந்தை நுழைவாயிலைக் கடந்த சுமார் 25,000 பொதுமக்களின் பயண பாதுகாப்பிற்கு ஐ.சி.ஆர்.சி கவனம் எடுத்தது. மருத்துவ உதவியை பெறுவதற்காக 400க்கு மேற்பட்டோர் வடக்கிலிருந்து தெற்கிற்குப் பயணம் செய்தனர். அத்துடன் 200 மேற்பட்ட அம்புலன்ஸ் வண்டிகள் உள்ளடங்களாக 3,500 வரையான வாகனங்களின் போக்குவரத்திற்கும் ஐ.சி.ஆர்.சி பணியாளர்கள் உதவினர்.(அ-2)


*திறமை மிக்க நிர்வாகி திரு V.N.பத்மநாதன் அவர்களின் நிர்வாகத்தில்*

**சண்டிலிப்பாய் ஐடியல் அக்கடமியின்**

புதிய கிளை

இன்று [09.04.2008] மானிப்பாயில் உதயமாகிறது

**★ மானிப்பாய்- ஐடியல் அக்கடமி**

மாணவர் உலகின் கலங்கரை விளக்கமாகத் திகழ்ந்து வளர்ந்து ஓங்க வாழ்த்துகின்றோம்.

சண்டிலிப்பாய். — ஆசிரியர்கள், மாணவர்கள் ஐடியல் அக்கடமி

**எடிசன் அக்கடமி**

539 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் (யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை எதிரில்)

**O/L DAY CLASS**

ஆரம்பம் : 11.04.2008 (வெள்ளிக்கிழமை) காலை 8.00 மணி

கணிதம்: B.P.பாஸ்கரன், T.ரவீந்திரன்
தமிழ்: பண்டிதர் வேலாயுதம்பிள்ளை
விஞ்ஞானம்: இரா.செல்வவடிவேல்
சமூகக்கல்வி: R.S.சந்திரன்
ஆங்கிலம்: P.N.சுதர்சன்
வர்த்தகம்: S.கிருபா
சமயம்: S.வாகீசன்

குறிப்பு : யாழ். மாவட்டத்தில் அதி கூடிய 10A களை கடந்த 9 வருடங்களாக தொடர்ச்சியாக பெற்றுவரும் ஒரே நிறுவனம்.
★ இம்முறை 14 மாணவ, மாணவிகள் எமது நிறுவனத்தில் 10A களை பெற்றுள்ளனர்.
★ குறுகிய காலத்தில் மொத்தம் 60 மாணவ, மாணவிகள் எமது நிறுவனத்தில் 10A களை பெற்றுள்ளனர்.

நிர்வாகி

**N.C.A வெளியீடு**

தரம் 05 புலமை பரிசில் பரீட்சை - 2008

★ பிரதி ஞாயிறு தோறும் இவ் வினாத்தாள் வெளிவரும்
★ வினாத்தாள்கள், விடைகளுடன் பின்வரும் இடங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

N.C.A கல்வி நிலையம் - இணுவில்
பூபாலசிங்கம் புத்தகசாலை - யாழ்ப்பாணம்
விநாயகர் தொலைத் தொடர்பகம் - தாவடி.
ஹரிகிருஷ்ணா புத்தகசாலை - இணுவில்
பாலசிங்கம் புத்தகசாலை - இணுவில்
அம்மா அச்சகம், புத்தகசாலை - மருதனார் மடம்
துர்க்கா புத்தகசாலை - சுன்னாகம்
ரஞ்சன் களஞ்சியம் -மல்லாகம்
நாயகபாலன் புத்தகசாலை - மானிப்பாய்.

**மது கல்வி நிறுவனம்**

டச்சு வீதி, இருபாலை, கோப்பாய்

**O/L DAY CLASS**

ஆரம்பம்: 10.04.2008
காலை 08-01 மணி வரை
நிர்வாகியின் முழு நேரக் கண்காணிப்புடன் வகுப்புகள் நடை பெறும்.

**A/L 2010 கலை, வர்த்தக பிரிவுகள்**

ஆரம்பம்: 12.04.2008 காலை 8.30 மணி

**DMI இரு இடங்களிலும்**

| பாடம் | நாவலர் வீதி ஆசிரியர் | ஸ்ரான்லி வீதி ஆசிரியர் |
|---|---|---|
| கணக்கீடு | D.Sam | D.Sam |
| வணிகக் கல்வி | பசில் | பசில் |
| பொருளியல் | ஸ்ரீ | ஸ்ரீ |
| தமிழ் | சந்திரசேகர் | மீரா |
| இந்து நாகரிகம் | ஜோதீஸ்வரன் | மகிந்தன் |
| புவியியல் | பாபு | இக்னேசியஸ் |
| அளவையியல் | மோகன், பவான் | மோகன், பவான் |
| கிறிஸ்தவம் | தேவராஜா | மல்லிகா |
| அரசியல் | இளங்கோ | இளங்கோ |
| நாடகம் | கனகேஸ்வரன் | கனகேஸ்வரன் |
| வரலாறு | பத்மன் | பத்மன் |
| ஆங்கிலம் | சுதர்ஷன் | சுதர்ஷன் |
| சிங்களம் | K.R.சூரி | K.R.சூரி |

**மாபெரும் கருத்தரங்கு — A/L 2008 கணக்கீடு**

★ முற்றிலும் பரீட்சை எதிர்பார்ப்புக்கள்.
★ கருத்தரங்கினது ஒவ்வொரு வெள்ளியும் 10-2 மணி வரை இடம் பெறும்.
★ வெளி மாணவர்கள் பங்குபற்றலாம்
★ அனுமதி பெறும் இடங்கள்

BEACON - யாழ் நகர்
BRAIN POWER - குருநகர்

* முதலாவது கருத்தரங்கு 11.04.2008 வெள்ளி காலை 10 இடம்: BEACON - யாழ் நகர்

BY: MR. பாலகஜன்

**சண்டிலிப்பாய் ஐடியலின் புதிய கிளை**

**ஐடியல் அக்கடமி**

*மானிப்பாய்*

(அந்தோனியார் கோவிலுக்கும் மானிப்பாய் மகளிர் கல்லூரிக்கும் இடையில்)

தரம் 6 முதல் O/L, A/L வரை

(இரு மொழி மூல வகுப்புக்கள்)

ஆரம்பம்: இன்று 09-04-2008 4p.m.

**O/L DAY CLASS**

ஆரம்பம்: இன்று 09-04-2008 8p.m.

கணித ஆசானும் நிர்வாகியும் V.N. பத்மநாதன்

**ஏசியன் அக்கடமி**

கொக்குவில் மேற்கு. கிளை: ஆடியபாதம் வீதி, கொக்குவில் மேற்கு.

**A/L 2010**

அனைத்து பிரிவுகளும் இரு இடங்களிலும்

ஆரம்பம் : 09.04.2008 புதன் காலை 9.00 மணி

**O/L DAY CLASS**

ஆரம்பம் : 09.04.2008 புதன் காலை 11.00 மணி

இயக்குநர்: ஷங்கர்சாமன் (விஞ்ஞானஆசிரியர்)

**மிதிவெடி விழிப்புணர்வுக் காலம்: ஏப்ரல் 1 - 14**

**மிதிவெடிகள், வெடிபொருள்களால் பாதிக்கப்பட்டவரும் சமூகத்தில் ஓர் அங்கத்தவரே**

சர்வோதயம் — யுனிசெவ்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) [illegible] வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 09.04.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.